பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 21 புதன்கிழமை 04.04.2018 கதிர் 150

## கட்டுநாயக்கவில் நேற்றுப் பதற்றம்!

கொழும்பு, ஏப்.04
கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுப் பதற்ற நிலை ஏற்பட்டது. விமான நிலையப் பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அங்கு பதற்ற நிலை தோன்றியது.
பக்கம் 03

# ரணில்தான் வேண்டும்; சம்பந்தன் விடாப்பிடி!



## கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நேற்று கூடியபோது கடும் விவாதம்

கொழும்பு, ஏப்ரல் 04
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கவேண்டும் என்பதில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் விடாப்பிடியான - உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறார் எனத் தெரிய வருகின்றது.
பக்கம் 03

## கூட்டமைப்பு நிபந்தனை

கொழும்பு, ஏப்.04
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பதற்குக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்திருக்கின்றது எனத் தெரிய வந்தது.
பக்கம் 18

## சம்பந்தனும் மாவையும் மைத்திரியுடன் சந்திப்பு

கொழும்பு, ஏப்.04
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித்
பக்கம் 18

## பிரேரணையை தோற்கடிப்போம்!
### ஐ.தே.க. சூளுரை

கொழும்பு, ஏப் .04
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று தோற்கடிக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.
நாடாளுமன்றத்தில்
பக்கம் 18

## சு.கவுக்குள் பிளவு!

கொழும்பு, ஏப்.04
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் முடிவெடுக்கும் விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உள்ளே பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
ரணில் பிரதமர் பதவியில்
பக்கம் 18

## ஐ.தே.க. பதவிநிலைகள் உடனே மறுசீரமைப்பு!
### பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.04
நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று நிறைவடைந்தவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பதவி
பக்கம் 18

## பிரேரணைக்கு சு.க. பூரணமான ஆதரவு
### கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஏப்.04
ரணில் விக்கிரமசிங்க உடனயாகப் பிரதமர் பதவியை இராஜினாமா செய்யாவிடின் நாடாளுமன்றில் இன்று நடைபெறவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது கூட்டு எதிரணியின் பிரேரணைக்கு ஆதரவாக வாக்
பக்கம் 18

## கரவெட்டியில் கூட்டமைப்புக்கு கைகொடுத்து உதவியது ஐ.தே.க.
### காலை வாரியது ஈ.பி.டி.பி.; சு.கவுக்கு ஆதரவு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.04
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற பலத்த போட்டிக்கிடையில் கரவெட்டிப் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரம் ஒரு வாக்கு வித்தியாசத்தில் கூட்டமைப்பு
பக்கம் 18

## மைத்திரி நடுநிலை

கொழும்பு, ஏப் .04
பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதா, இல்லையா என்ற எந்தத் தீர்மானமும் இன்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடுநிலையான நிலைப்பாட்டில் உள்ளார் என வெளி
பக்கம் 18

## பதவி விலகமாட்டார் ரணில் சு.கவுக்கு ஐ.தே.க. பதிலடி!

கொழும்பு, ஏப்.04
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துள்ள தீர்மானம் தொடர்பிலான கடிதம் நேற்றுப் பிரதமருக்கு அனுப்பப்பட்டது. ஆயினும், பிரதமர் இராஜினாமா செய்யவேண்டிய அவசியம் இல்லையென அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பதிலளித்துள்ளது.
ஸ்ரீலங்கா சுதந்திரக்
பக்கம் 18

## ஐரோப்பிய எம்.பிக்கள் இன்று கொழும்பு வருவர்

கொழும்பு, ஏப்.04
ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை வரும் இந்தக் குழுவினர், எதிர்வரும்
பக்கம் 18

## வடக்கில் கஞ்சாவைத் தடுக்க ஆளுநர் - தளபதி நேற்று பேச்சு



யாழ்ப்பாணம், ஏப்.04
வடக்கு மாகாணத்துக்குள் போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கும் வடக்குக் கடற்படைத் தளபதிக்கும் இடையே நேற்று முக்கிய சந்திப்பு ஒன்று
பக்கம் 18

## புதிய இந்தியத் துணைத் தூதர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஏப்.04
யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவராகப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள எஸ்.பாலசந்திரன் நேற்று
பக்கம் 18

## கூட்டமைப்பு அரியணை ஏற மஹிந்த தரப்பினரும் ஆதரவு
### பருத்தித்துறைப் பிரதேச சபையின் தலைவராக அரியகுமார் தெரிவு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.04
ஈ.பி.டி.பி., ஐ.தே.க., ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகியவை ஆதரவளிக்க பருத்தித்துறைப் பிரதேச சபையின் தலைமையைக்
பக்கம் 18

## இது ரகசியம் அல்ல!

உள்ளே நடந்த இரகசியங்களை அவிழ்த்து விடுவதுதானே இந்தப் பத்தி...!
ஆகவே, இப்போது பரபரப்பாகப் பேசப்படும் ஒரு சமாச்சாரம் பற்றிய உள் விவகாரங்களைக் கசிய விடுவது கொஞ்சம் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.
பக்கம் 03

காலைக்கதிர் Kalaikkathir



# புதிய வருமான வரிச் சட்டத்தின் மூலம் வடக்கில் முதலீடு செய்வோருக்கும் சலுகை




அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 04

சிக்கலான வரிச் சட்டம், புதிய வருமான வரிச் சட்டத்தின் மூலம் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், வடமாகாணத்தில் முதலீடு செய்வோருக்கும் வரிச் சலுகை கிடைத்துள்ளது. 3 பில்லியன் டொலர்களுக்கும் குறைவான முதலீட்டாளர்களுக்கு வரிச் சலுகை வழங்கப்படும். இந்த வரிச் சட்டத்தின் மூலம் நியாயமான வருமான வரி முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய வரி முறை தொடர்பில் திரிவுபடுத்தப்பட்ட தகவல்கள் பல செய்திகளில் வெளியாகியுள்ளன. இவ்வாறான செய்திகள் மூலம் மக்களை பிழையான வழியில் இட்டுச் சென்று அவர்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்க வேண்டாம்.

வரி செலுத்தத் தவறுவதை கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச நீதி, நாட்டிற்கு ஏற்ற வகையில் வகுக்கப்பட்டுள்ளது. தற்போது 18 சத வீதமாக உள்ள வருமான வரியை 2020 ஆம் ஆண்டில் 40 சத வீதம் வரை அதிகரிப்பது இதன் நோக்கமாகும். ஏப்ரல் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்த வரி முறையின் மூலம் எதிர்வரும் 2 காலாண்டுகளில் 3 கோடி ரூபாவை வருமானமாக ஈட்ட எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்றவர்களிடமிருந்து எதுவித வரியும் அறவிடப்படமாட்டாது. எனினும், வட்டி வருடத்திற்கு 15 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாக இருக்குமானால், வரி அறவிடப்படும்.

வெளிநாடுகளில் பணிபுரிபவர்களின் வருமானத்திற்காக வரி அறவிடப்படமாட்டாது. வெளிநாடுகளுக்கு ஏதாவது சேவையை வழங்கி பெற்றுக் கொள்ளப்படும் வருமானத்தில் 15 லட்சம் ரூபா வரையான தொகைக்கு வரி விடுதலை அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி செய்வோருக்கு கூடுதலான சலுகை வழங்கப்பட்டுள்ளது. மூன்று பில்லியன் டொலர்களுக்கும் 100 பில்லியன் டொலர்களுக்கும் இடைப்பட்ட தொகையில் முதலீடு செய்வோருக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவின் சிறந்த வரி முறை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வரிப் பணத்தை முற்று முழுதாக சரியான முறையில் மக்கள் சேவைக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மங்கள குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்கிரமரத்ன தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து வியாபாரிகளையும் வர்த்தகர்களையும், ஒரே விதமாக கருதும் வரி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வரிகள் மூலம் சமூக நீதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பவர்களிடம் அறவிட்டு, இல்லாதவர்களுக்கு வழங்குவது இதன் பிரதான நோக்கமாகும்.

வற்வரி நியாயமானதல்ல. இந்த வருமான வரி மூலம் வற்வரியை குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (க)

## ரயில்வே ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டம்

ரயில்வே சேவையை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் நாள்களில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. விதானகே இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மேலும், ரயில்வேத் திணைக்களத்தைத் தனியான நிர்வாக சபையின் கீழ் மாற்றுவதற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுகிறோம் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## காட்டு யானைகளின் தொல்லையால் நெடுங்கேணி சேனைப்புலவு மக்கள் அவதி

வவுனியா, ஏப். 04

வவுனியா வடக்கு நெடுங்கேணி சேனைப்புலவு கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லையால் தாம் இடம் பெயர்ந்து செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுகிறது என அந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்திற்குட்பட்ட சேனைப்புலவு கிராமத்தில் அண்மைய நாள்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் தாங்கள் அன்றாடம் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் அந்த மக்கள் மேலும் தெரிவிக்கையில் -

இந்தப் பகுதியில் வாழும் கூடுதலான குடும்பங்கள் விவசாயத்தை ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தமது கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதுடன் தோட்டச் செய்கைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பப்பாசி, வாழை, போன்ற பயிர்களையும் ஏனைய தென்னை, பலா போன்ற மரங்களையும் அழித்து வருகின்றன.

அதேவேளை, வீடுகளைக் கூட யானைகள் சேதமாக்கி வருகின்றன. இவ்வாறு யானைகளின் அட்டகாசத்தால் தாங்கள் தினமும் உயிர் அச்சுறுத்தல்களுடன் வாழும் நிலை காணப்படுகிறது.

இதனால், இங்குள்ள சில குடும்பங்கள் வேறு இடங்களை நோக்கி நகரும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் இந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

(க)

## வீட்டுப் பணியாளர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியம்

வீட்டுப் பணியாளர்களுக்கும் எதிர்காலத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தை வழங்குவதற்குத் தேவையான சட்ட நகல் வரவை தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளாம் என அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்ட தொழில் திணைக்கள அலுவலக திறப்பு விழாவில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெரும் எண்ணிக்கையிலான வீட்டுப்பணியாளர்களுக்கு இதுவரை காலம் இல்லாதிருந்த உரிமைகள் பலவற்றைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது. அதற்கு இணங்க ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றை செலுத்த வேண்டி வரும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். வீட்டுப் பணியாளர்கள் விபத்துக்கள் இல் சிக்கினால் இதுவரை காலம் அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படவில்லை. புதிய சட்டத்தின்படி இந்த உரிமையும் கிடைக்கும்.

உழைக்கும் மக்களுக்கு உரித்தான சகல தொழிலாளர் உரிமைகளையும் வீட்டுப் பணியாளர்களுக்கும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் சுனாமி முன்னெச்சரிக்கை வேலைத்திட்டம்

கொழும்பு, ஏப். 04

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான இலங்கை நிறுவனம் (UNDP) பாடசாலைகள் மத்தியில் சுனாமி முன் எச்சரிக்கை தொடர்பான வேலைத் திட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட சுனாமி என்ற கடற்பேரலையால் 35ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் உயிரிழந்தனர்.

இதேபோன்று, நாடு முழுவதிலும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர். சுனாமியினால் 183 பாடசாலைகளுக்கும் தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் 18 இற்கும் 4 பல்கலைக் கழகங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டன.

இதேபோன்று கரையோர மாவட்டங்களில் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்விக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதனைக் கருத்திற்கொண்டு ஜப்பான் அரசு ஆசிய பசுபிக்கல் பிரதேசத்தில் ஏற்படும் சுனாமி தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் முன் எனச்சரிக்கையை வலுவூட்டுவதற்கான பிராந்திய திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றது. சுனாமியினால் ஏற்படும் உயிராபத்தைக் கட்டுப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

யுன்டிபி நிறுவனம் ஆசிய பசிப்பிக் பிராந்தியத்தில் தனது 18 உள்ளூர் அலுவலகங்களின் ஊடாக 90 பாடசாலைகளில் சுனாமி முன் எச்சரிக்கை வேலைத் திட்டத்தை நடத்தவுள்ளது.

பங்களாதேஷ், கம்போடியா, பிஜீதீவுகள், இந்தோனேசியா, மாலைதீவு, மலேசியா, மியன்மார், பாகிஸ்தான், பப்புவா, நியூகினியா, பிலிப்பைன்ஸ், செமோவா தீவுகள், இலங்கை, தாய்லாந்து, தீமோர், வியட்னாம் உள்ளிட்ட நாடுகளில் நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுனாமி தாக்கத்திற்குள்ளான பாடசாலைகளுக்குள் தெரிவுசெய்யப்பட்ட 5 பாடசாலைகளுக்கு மத்தியில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

இடர் முகாமைத்துவ அமைப்பு, செஞ்சிலுவைசங்கம், இலங்கை கடற்படை, பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கமைவாக இந்த முன்னெச்சரிக்கை நிகழ்ச்சி காலி வித்தியாலோக மத்திய மாகா வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளது.

## தகவல் தொழில்துறை பேரவை புரிந்துணர்வு உடன்படிக்கை!

கொழும்பு, ஏப். 04

இஸ்லாமாபாத் தொழில் அபிவிருத்தி பேரவையும் இலங்கை தகவல் தொழில் துறை பேரவையும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளன.

இரு நாடுகளுக்கு இடையில் தொழில்துறை அபிவிருத்தியை மேற்கொள்வதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். இதனடிப்படையில் இருநாடுகளுக்கும் இடையில் பயிற்சி கற்கைநெறிக்கான நிகழ்ச்சி நிரல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கையில் வெற்றி கண்டுள்ள கல்வி மூலமான தொழில் பயிற்சி குறித்த அனுபவங்களை பாகிஸ்தான் இதனூடாகப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று இஸ்லாமாபாத் தொழில் அபிவிருத்திப் பேரவையின் கொள்கை முன்னெடுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரம்தான் இப்போது படுசூடான விடயம். அது தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு யாது என்பது இன்று தமிழருக்கு மட்டுமல்ல, தென்னிலங்கைத் தரப்புகளுக்கும் முக்கிய பேசு பொருளாக உள்ளது.

இந்த விவகாரத்தில் ஒரு முடிவு எடுப்பதற்காக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நேற்று இரண்டு, மூன்று தடவைகள் கூடினர்.

கூட்டமைப்புத் தரப்பில் மூன்று 'சி'கள் மிஸ்ஸிங். சித்தார்த்தன், சிறிநேசன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரே அவர்கள். சித்தார்த்தன் தாயின் இறப்பு வீட்டுக் கிரிகைகளின் தொடர்ச்சியில் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றார் எனக் கூறப்பட்டது. இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு சமயம் அவர் நாடாளுமன்றுக்குப் பிரசன்னமாவாரா என்பது தெரியவில்லை. சிக்கலில் சிக்காமல் இருப்பதற்கு இதுதான் நல்ல சாட்டு என்று அவர் கருதவும் வாய்ப்புண்டு. சிவசக்தி ஆனந்தன்தான் கூட்டமைப்புக்குள் குழப்பத்தில் இருக்கின்றாரே. ஆகவே அவர் போகவில்லை. சிறிநேசன் ஏன் போகவில்லை என்பது தெரியவில்லை.

வழக்கமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்புக் கூட்டங்களில் ஏனையோரைப் பேசவிட்டு பார்த்திருப்பார் சம்பந்தன். கடைசியாகத்தான் அவர் கருத்துத் தெரிவிப்பார். தலையைச் சாய அல்லது தொங்கப் போட்டபடி, கண்ணை மூடியவாறு தியானத்தில் இருப்பவர் போல அச்சமயங்களில் அவர் காட்சி தருவார். அவர் உண்மையில் தூங்குகின்றாரா அல்லது ஊன்றி செவி மடுக்கின்றாரா என்பது பேசிக் கொண்டிருப்பவருக்கு சந்தேகமாகத்தான் இருக்கும். திடீரென கண்விழித்து *"என்ன சொன்னீர்கள்? விளங்கவில்லை. திருப்பிச் சொல்லுங்கள்!"* - என்று கேட்கும் போதுதான் அவர் அதுவரை எல்லாவற்றையும் செவிமடுத்துக் கொண்டிருந்தார் என்பதை நீங்கள் உணர முடியும். அப்படி வயதானவர் தூங்குகின்றமை போல பாவனை பண்ணுவதும் அவரின் சமயோசிதம் தான். சில சர்ச்சைக்குரிய விடயங்களில் தாம் தலையிட விரும்பாவிட்டால், அவற்றை செவிமடுக்காதவர் போல விட்டுவிடுவார். அரசியலில் கிழட்டு நரி ஜே.ஆர். ஜெயவர்த்தன போல இவரும் பழமும் தின்று கொட்டையும் போட்ட சூரர்தானே...!

ஆனால் நேற்றைய கூட்டத்தில் அவரின் போக்குத் தலைகீழாக இருந்தது. கூட்ட ஆரம்பத்தில் வழமைக்கு மாறான நிலைப்பாட்டை எடுத்தார்.

*"வழமையாக நீங்கள் பேசுவீர்கள். இன்று நான் சொல்வதைக் கேட்க அனுமதியுங்கள்!" - என்றார் சம்பந்தன்.*

அவரது பேச்சு ஒரே நிலைப்பாடுதான். ரணிலைக் காப்பாற்றும் விதத்தில் வாக்களிக்க வேண்டும் என்பதுதான். அப்படி நடக்காவிட்டால் மஹிந்தர் ஆட்சிக்குவந்து விடுவார், தமிழர்கள் அழிந்தார்கள் என்று ஒரே எச்சரிக்கைப் பிடிதான்.

வேறு கதைக்கு இடம் அளிப்பவராக சம்பந்தன் நடக்கவில்லை. எதிர்த்துப் பேசத் தம்மை அனுமதிக்கவில்லை என்ற கோபத்தில் ஒரு கட்டத்தில் சிறிதரன் எம்.பி. வெளிநடப்புச் செய்யவும் தயாரானார். மாவையும், சுமந்திரனும் அவரைக் கட்டுப்படுத்தி அடக்கினர்.

யார், யார் என்னென்ன விடயங்களைச் சொன்னார்கள் என்று குறிப்பிடாமல் அங்கு பரிமாறப்பட்ட சில தகவல்களைக் குறிப்பிட விரும்புகின்றேன். *'இவை நாளை பத்திரிகையில் வரக்கூடாது'* என்ற முன்னறிவிப்போடு அங்கு எம்.பிக்களுக்கு உரைக்கப்பட்ட தகவல்கள் இவை:-

★ ரணிலை ஆதரிக்கும்படி கொழும்புக்கான இந்தியத் தூதுவர் சம்பந்தனை வற்புறுத்தியிருக்கின்றார்.

★ ரணிலைக் கைவிட வேண்டாம், அவருடன் சேர்ந்து நின்று தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சிகளை முன்னெடுங்கள் என்று கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் சம்பந்தனை வேண்டியுள்ளார்.

★ புதுடில்லிக்கான அமெரிக்கத் தூதுவரும் சுமந்திரனுடன் தொடர்பு கொண்டு இதனையே வலியுறுத்தியுள்ளார்.

★ ரணில் அரசைக் குழப்ப வேண்டாம் என்ற நிலைப்பாட்டை இலங்கை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவதற்காக அமெரிக்கத் துணை ஜனாதிபதி தொலைபேசி மூலம் இலங்கை ஜனாதிபதியுடன் பேச முயன்றார். ஆனால் இணைப்பில் இலங்கை ஜனாதிபதியைப் பிடிக்க முடியவில்லையாம்.

★ ரணிலைப் பதவி நீக்கிவிட்டு புதிய பிரதமர் பதவிக்கு கோட்டாபய ராஜபக்ஷவைக் கொண்டு வருவதுதான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் திட்டம். அதற்காகவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நகர்வு முன்னெடுக்கப்பட்டது. கூட்டு எதிரணிக்குள் இருக்கும் கோட்டா ஆதரவு அணியே அதற்கு பிள்ளையார் சுழி போட்டது. சர்வதேச அழுத்தங்களை அடுத்து, தாம் முன்னின்று இந்தப் பிரேரணை விடயத்தை நகர்த்துவதினின்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பின்வாங்கியவர் போல இப்போது நடிக்கின்றார்.

★ மஹிந்த ராஜபக்ஷ - கோட்டாபய ராஜபக்ஷ கட்டுப்பாட்டில் அரச நிர்வாகம் வருமானால் தமிழர் கதி அதோகதிதான்.

-இவை எல்லாம் நேற்றைய நாடாளுமன்றக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களின் சுருக்கம்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் சமயம், முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் விக்னேஸ்வரனை நிறுத்துவது என்ற முடிவை சம்பந்தன் தனித்து எடுத்தார். அவர் தலைவராக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் மாவை சேனாதிராசாவை அப்பதவிக்கு நிறுத்தத் தலைகீழாக நின்று பார்த்தன. சரிவரவேயில்லை. சம்பந்தன் விட்டுக் கொடுக்கவேயில்லை. பிடித்த பிடியாக நின்று விக்னேஸ்வரனையே வடக்கு மாகாண முதல்வர் வேட்பாளராக்கினார். தானும் வந்து யாழ்ப்பாணத்தில் நின்று, முகாமிட்டு, விக்னேஸ்வரனுக்கும் கூட்டமைப்புக்கும் பெரு வெற்றியை வாங்கிக் கொடுத்துவிட்டுத்தான் திரும்பினார்.

அதுபோல, ரணிலைக் காப்பாற்றியே தீருவேன் என்பதில் சம்பந்தன் மிக மிக உறுதியாகவும், திடமாகவும் இருக்கின்றார்.

ரணிலை ஆதரிக்கவோ, காப்பாற்றவோ கூடாது, இந்த வாக்களிப்பில் நடுநிலை வகிக்க வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன், சிறிதரன், சாள்ஸ் நிமலநாதன் போன்றோர் வலியுறுத்தினர்.

அத்தரப்பினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ ரணில் அரசை நம்பி சமரச - சமாதான - முயற்சிகளில் இறங்கி, எதுவும் உருப்படியாக நடக்கவில்லை. மக்களின் செல்வாக்கைக் கூட்டமைப்பு இழந்தது தான் மிச்சம்.

★போதாக்குறைக்கு இப்போது ஈ.பி.டி.பி. போன்ற தரப்புகளுடன் சேர்ந்து உள்ளூராட்சி நிர்வாகங்களைக் கைப்பற்றினோம் என்ற குற்றச்சாட்டினால் கூட்டமைப்பின் மக்கள் செல்வாக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தப் பின்புலத்தில் ரணிலின் அரசை ஆதரித்துக் காப்பாற்றினோம் என்றால் கூட்டமைப்பின் செல்வாக்கு முற்றாக அடிபட்டு, அது காணாமல்போன கட்சியாகும் ஆபத்து நேரும்.

★மஹிந்தர் அரசு தமிழருக்கு எதிராக அட்டூழியம் செய்தது என்பது உண்மைதான். ரணிலின் அரசுகளும், முன்னைய ஐ.தே.கட்சி அரசுகளும் கூட அதற்குக் குறைந்தவையோ, சளைத்தவையோ அல்ல.

★புலிகளின் இயக்கத்தைப் பிரித்து தமிழர் பலத்தை நலிவடையச் செய்த நரித் தந்திரசாலி தான் ரணில். நாம் அதனை மறக்கக்கூடாது.

-இவ்வாறு சம்பந்தரின் நிலைப்பாட்டுக்கு மாறான கருத்தும் அங்கு கூறப்பட்டது. ஆனால் அதற்கு காது கொடுப்பவராகவோ மதிப்பவராகவோ சம்பந்தன் இல்லை.

ஆக, இன்றைய நிலையில் ரணிலைக் கூட்டு எதிரணி தோற்கடிக்கும் நிலைமை வந்தால், கூட்டமைப்புக் கைகொடுத்து அவரைக் காப்பாற்றும் என்பது மட்டும் நிச்சயம்.

ஒரு பிரதமர் பதவி இழக்காமல் அவரைக் காப்பாற்றிய ஒரேயொரு எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன்தான் என்று சரித்திரத்தில் பதியப்படும் நிலைமை இன்றுடன் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

-மின்னல்-

## கிளிநொச்சியில் சந்திரிகா



கிளிநொச்சி, ஏப்.04

முன்னாள் ஜனாதிபதியும் தேசிய நல்லிணக்கச் செயலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

தேசிய நல்லிணக்கச் செயலகத்தின் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளையே அவர் ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுக் காலை பளைப் பிரதேசத்தில் பளை இந்து ஆரம்ப பாடசாலை ஒன்றின் வகுப்பறைக் கட்டடத்தைத் திறந்து வைத்து பின்னர், கிளிநொச்சி கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐந்து மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட உணவு பதனிடல் நிலையத்தையும் திறந்து வைத்தார்.

பின்னர் வட்டக்கச்சி மற்றும் முழங்காவில் பிரதேசங்களில் தேசிய நல்லிணக்கத்தின் செயலகத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங் களையும் மக்களின் பாவனைக்குத் திறந்து வைத்தார். (ஐ)

## ரணிலை ஆதரிக்க மு.கா. தீர்மானம்

கொழும்பு, ஏப். 04

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோல்வியடையச் செய்வதற்கு தமது வாக்குகளை வழங்குவது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

நேற்றிரவு நிறைவடைந்த ஸ்ரீ ல.மு. காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள நிலைவரங்களையும், முஸ்லிம்களின் எதிர்காலம் தொடர்பிலும் ஆராய்ந்த உயர் பீடம் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோல்வியடையச் செய்வது என தீர்மானித்தது.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாகிய நாம் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கத்துக்கு எதிரான ஒன்றாகவே பார்க்கின்றோம். இன்று கூடிய உயர் பீடத்தில் எழுந்த சில கேள்விகள் தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளனர் எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஊடகங்களிடம் குறிப்பிட்டார்.

## ரணில்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு ரணிலையே ஆதரிக்க வேண்டும் என்பதை அவர் நேற்றுத் தனது சகாக்களிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கின்றார் என்றும் அறிய முடிந்தது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஆரம்பமானது.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கூட்டமைப்பு என்ன முடிவை எடுப்பது என்று தீர்மானிப்பதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறிநேசன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் பங்கேற்கவில்லை. ஏனையோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே இன்று விவாதத்துக்கு வரவுள்ள ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கூட்டமைப்பு எதிர்க்க வேண்டும் என தலைவர் சம்பந்தன் கருத்து முன்வைத்தார்.

ஆயினும் கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலர் இதற்கு உடன்படவில்லை என்றும், குறிப்பாக சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் ரணிலுக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை எதிர்த்தமையுடன், கூட்டமைப்பு இந்த விடயத்தில் நடுநிலை வகிக்க வேண்டும் என்று வாதிட்டனர் எனவும் கூறப்பட்டது.

ரணிலை ஆதரிக்காமல் விட்டால் அது தமிழ் மக்களுக்கு பாதகமான முடிவுகளைக் கொண்டு வரும் எனக் கருத்து வெளியிட்ட இரா.சம்பந்தன் ரணிலை ஆதரிப்பதுதான் கூட்டமைப்பின் முடிவு என்பதில் உறுதியாக இருந்தார் என்றும் கூறப்பட்டது.

சம்பந்தன் இவ்வாறு விடாப்பிடி நிலையில் இருந்தமையால் நேற்றைய கூட்டத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

இடையே ஜனாதிபதி மைத்திரிபாலவையும், பிரதமர் ரணிலையும் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்புக்களுக்குப் பின்னரும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் தொடர்ந்தது.

இறுதியில் ரணிலை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டிலேயே கூட்டம் முடிவடைந்தது எனத் தெரிய வந்தது. (ஐ)

## கட்டுநாயக்கவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1994ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு வழங்கப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டு சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரப்பட்டது.

இந்த நிலையில் ஒரு ஊழியருக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக் கடிதத்தைச் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் வழங்கியபோது, அவர் அதைக் கிழித்து குப்பையில் போட்டமைக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திர சேவைச் சங்கத்தின் தலைவர் எம்.டபிள்யூ. பி.முகாந்திரம் இது குறித்து தெரிவிக்கையில்,

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் ஆகியன கடந்த ஆண்டில் 11 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளன. இந்தச் சம்பள அதிகரிப்பால் அதில் 0.98 வீத அளவு மேலதிக செலவினமே ஏற்பட போகிறது. - என்றார்.

கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்களின் ஆர்ப்பாட்டத்தால் பிரதான வீதி மூடப்பட்டுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பாவம் சம்பந்தன்; என்ன செய்வார்?

ஆங்கிலத்தில் சீட்டு விளையாட்டை ஒட்டிய முதுமொழி ஒன்று உண்டு. 'தனது சீட்டுக்களை நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்து ஆடுதல்' என்று அதனை மொழிபெயர்க்கலாம். அதாவது தன்னிடம் உள்ள சீட்டின் விவரத்தைப் பிறர் அறியாத வகையில் மறைத்துப் பேணி விளையாடுதல் என்று இதற்குப் பொருள் கொள்ளலாம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இன்று நாடாளுமன்றத்துக்கு வரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் தமது அணுகுமுறை - முடிவு - எப்படியிருக்கப் போகின்றது என்ற விடயத்திலும், பல கட்சிகளும் தங்கள் சீட்டுகளைத் தமது நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்து விளையாடவே விரும்புகின்றன போலத் தெரிகின்றது.

பிரேரணையைக் கொண்டுவந்த கூட்டு எதிரணித் தரப்பும், பிரேரணையில் இலக்கு வைக்கப்பட்ட பிரதமர் ரணில் தரப்பும் இவ்விடயத்தில் நேர் எதிரெதிரான தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்திச் செயற்படுகின்றன எனலாம். மற்றைய பல தரப்புகளினதும் நிலைப்பாடு அப்படியும், இப்படியுமாக ஊசலாடுவது போல மாறிமாறிக் கொண்டிருக்கின்றது.

இவற்றுக்கு மத்தியில் -

இன்றைய நிலையில் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய அட்சர கணிதக் கணக்கின் காரணமாக முன்னிலை பெற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தனது நிலைப்பாட்டை இதுவரைப் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

இன்று இரவு நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு சமயத்தில்தான் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைச் சம்பந்தன் கோடி காட்டி வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டமைப்பில் பல எம்.பிக்கள் இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் எந்தப் பக்கமும் சாயாமல் நடுநிலையாக இருப்பதே உசிதமானது - சிறந்தது - என்று கருதுகின்றனர் எனத் தெரிகின்றது.

இவ்விடயம் குறித்து ஆராய்வதற்காகக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுக் கூடிய போது, இவ்வாறான கருத்து நிலைப்பாடே வெளிப்படுத்தப்பட்டதாக அறியவந்தது.

ஆனால், கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் வேறு விதமாகக் கருதுகின்றார்.

தமிழ்க் கூட்டமைப்பு ஆதரிக்கத் தவறியமையால் ரணிலின் அரசு கவிழ்ந்தது என்ற 'அபவாதம்' வராமல் பார்த்துக்கொள்ள அவர் விரும்புகின்றார் எனத் தெரிகின்றது.

ரணிலின் அரசு தனக்குள்ள செல்வாக்கையும், ஆதரவையும் பயன்படுத்தித் தனது அரசைத் தானே தக்க வைத்துக்கொள்ளுமாயின் அது 'ஓகே!'. அப்படியில்லாமல் ஒரு கொஞ்சத் தொகை வாக்குகளால் நாடாளுமன்றில் அது தோற்கடிக்கப்படும் என்று வருமானால், உடனடியாக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலையிட்டு அதைக் காப்பாற்றுவது என்ற நிலையில் இரா.சம்பந்தன் இருக்கின்றார் எனக் கருதப்படுகின்றது.

எது, எப்படியென்றாலும், இன்றைய நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்போடு ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான தேனிலவு முடிவுக்கு வந்து விடும். நல்லாட்சி உறவுக்கான விவாகரத்துப் பத்திரம் ஒப்பமிட்டதாகிவிடும்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெற்ற தரப்பு புதிய அரசை அமைக்கும். அதன் நல்லாட்சி அரசுத் தோழனாக அதுவரை இருந்து வந்த கட்சி எதிர்க்கட்சி நிலைக்கு வரும் நிலைமை ஏற்படும்.

அப்படி எதிரணிக்கு உத்தியோகபூர்வமாக வருகின்ற தரப்புக்குத் தமது தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் பதவியை விட்டுக் கொடுக்க வேண்டிய கட்டாய இக்கட்டில் சம்பந்தன் சிக்கிக் கொண்டுவிட்டார்.

இன்றைய நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதமர் ரணிலின் பதவிக்கு ஆப்பு வைக்குமா அல்லது அவரது அரசு தப்பிப் பிழைக்குமா என்பது வேறுவிடயம். ஆனால் அது, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை அப்பதவியிலிருந்து அகற்றிப் புதிய ஒருவரை அப்பதவிக்கு அமர்த்தும் சூழலை கொண்டுவந்துவிட்டது என்பது மட்டும் உண்மையாகப் போகின்றது.

பாவம் சம்பந்தன். இந்த நல்லாட்சி அரசின் அஸ்தமனத்துடன், அவர் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த அமைதி முயற்சிகளும் அடங்கப் போகின்றன.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தையும், அதனோடு மங்கப் போகும் நல்லாட்சி அரசு மற்றும் அமைதி முயற்சிகள் விவகாரத்தையும் இனி சம்பந்தன் எப்படிக் கையாளப் போகின்றார்? பொறுத்திருந்து பார்ப்போம்.

இந்த அரசியல் நெருக்கடிகள் எல்லாவற்றையும் இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் முடிவில் ஒரே சமயத்தில் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் சம்பந்தன் இருக்கின்றார். அவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இனி அரசியல் எதிர்காலம் மிகக் கஷ்டமானதாகத்தான் அமையப் போகின்றது.

# மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் இந்தியப் பயணத்துக்கு நீதிமன்றம் தடை!



இலங்கை இராணுவத்தின் முன்னாள் தலைமை அதிகாரியும், பாதுகாப்புச் சேவைகள் கட்டளை அதிகாரிகள் கல்லூரியின் தற்போதைய தளபதியுமான மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ள வழங்கிய அனுமதியை ரத்துச் செய்துள்ள கல்கிசை நீதிமன்றம், அவர் வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட வழக்கில், மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை சந்தேக நபராக உள்ளடக்க முடியும் என்று கல்கிசை நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த அறிக்கையை அடுத்தே, அவரது வெளிநாட்டுப் பயணத்துக்கு நீதிவான் தடை விதித்துள்ளார்.

முன்னதாக, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடைவிதித்திருந்தது.

எனினும், பாதுகாப்புச் சேவைகள் கட்டளை அதிகாரிகள் கல்லூரியின் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், அவர், ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதிவரை இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டு இருந்தார்.

இதற்காக அவர் நீதிமன்றத்தை அணுகி, வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு கோரியிருந்தார். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்த நிலையில் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் பயணத்துக்கு தடை விதிக்குமாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை, குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கல்கிசை நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.

இதுதொடர்பாக, தாம் பாதுகாப்புச் செயலருடன் கலந்துரையாடினர் எனவும் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் பயணத்துக்கு நீதிமன்றம் தடைவிதித்திருக்கும் விடயத்தைத் தாம் அறியவில்லை என்றும் அவர் கூறினார் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன், தாம் அவரை இந்தப் பயணத்துக்காக முன்மொழியவில்லை என்றும், அதனை இலங்கை இராணுவமே பரிந்துரைத்தது என்றும் பாதுகாப்புச் செயலர் தம்மிடம் கூறினார் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் இந்தியப் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என இலங்கை இராணுவத்தின் தரப்பில் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வெளிநாடு செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை ரத்துச் செய்த நீதிமன்றம், மீண்டும் அவருக்கான தடை உத்தரவைப் பிறப்பித்தது.

அதேவேளை, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, வாக்குமூலம் அளிப்பதற்காக நாளை குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் முன்னிலையாக வேண்டும் என்றும் கல்கிசை மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# பண்டிகைக் காலங்களில் விசேட பொலிஸ் பாதுகாப்பு!

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் பொதுமக்கள் பெருமளவில் காணப்படும் பிரதேசங்களில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொழும்பு நகருக்கு வருகை தருவோருக்கு பொலிஸார் சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

கொழும்பு, புறக்கோட்டை, மகரகம, நுகேகொட, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் பொருள்களை கொள்வனவு செய்யும் பொழுது திருடர்கள் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். தமது பாதுகாப்பு தொடர்பில் மக்கள் கூடுதலான கவனம் செலுத்துமாறும் பொலிஸார் மேலும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பொதுவாக இவ்வாறான பண்டிகைக் காலப்பகுதியில் திருடர்கள் சன நெருக்கடியான இடங்களில் நடமாடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமது பொதிகள், பணம் மற்றும் சிறுபிள்ளைகள் அணிந்திருக்கும் தங்க ஆபரணங்கள் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வாகனங்களில் வருவோர் வாகனங்களைத் தரிப்பிடங்களில் நிறுத்துவது தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்லும் போது தாம் வந்த வாகனத்தைக் கவனிப்பதற்கும் ஒருவரை நிறுத்திச் செல்வது பொருத்தமானது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (கு)

## விவசாய அமைச்சிடம் பாவனையில் உள்ள தண்ணீர் பவுசர்கள் முதலமைச்சர் அமைச்சுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 04

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வந்த நீர் வழங்கல் சேவையைத் தொடர்ந்து, உரிய பிரதேச சபைகளுக்கு ஊடாக அந்தந்தப் பிரதேசங்களுக்கு வழங்கும் நோக்கத்துக்காக நான்கு தண்ணீர் பவுசர்கள் முதலமைச்சர் அமைச்சுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கடந்த 28 ஆம் திகதி முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் இத் தண்ணீர் பவுசர்களை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

அந் நிகழ்வில் முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், முதலமைச்சர் அமைச்சின் பிரதம கணக்காளர் பி.ஜெயராஜா, கணக்காளர் ஆ.கிரிதரன், வடமாகாண விவசாய அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் மே.சாந்தசீலன் மற்றும் அமைச்சுகளின் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந் நிகழ்வு கைதடியில் அமைந்துள்ள வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது. (இ)

## வாராஹி அம்பாளுக்கு நாளை கொடியற்றம்

கொக்குவில் மேற்கு, வாராஹிபுரம் திருவருள் மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் தேவஸ்தான திவ்ய பிரம்மோற்சவப் பெருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை மாலை திருமஞ்சத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை மாலை குதிரை வாகனத் திருவிழாவும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பெரிய சப்பறத் திருவிழாவும் –

மறுநாள் புதுவருட தினத்தன்று காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று மறுநாள் திங்கட்கிழமை காலை சங்காபிஷேகமும் மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ)

### நாளை

05.04.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : அனுசம் மு.ப. 10.39 வரை
திதி : பஞ்சமி மு.இ. 7.29 வரை
சுபநேரம் : 7.39 – 9.09 வரை
இராகுகாலம் : 1.39 – 3.09 வரை

# ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் இறுதி நாள் இன்றாகும் என்கிறார் வீரவன்ச

கொழும்பு, ஏப். 04

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டு எதிர்க்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள தரப்பொன்றும் ஆதரவு வழங்கவுள்ளன.

பிரதமரும் அவருடன் இருப்பவர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு எவ்வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் அது வெற்றியளிக்கப்போவதில்லை.

எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் இறுதித் தினம் இன்றாகும் என்று கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட தேசியசுதந்திரமுன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டு மக்கள் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நல்லாட்சி அரசுக்கு எதிராக தமது ஆணையை வழங்கினர். அதனை அடிப்படையாகக் கொண்டு பிரதமர் ரணில் விக்கரமசிங்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்துள்ளது.




எனவே, இன்று சூரியன் மறைவதும் நாளை சூரியன் உதிப்பதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் தோல்வியை பறை சாற்றிக்கொண்டாரும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

தற்போது பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டுள்ளன. பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைகிறது. வடக்கு தெற்கு என சகல பிரதேசங்களிலும் சட்டம் செயலிழந்துபோயுள்ளது. எப்போதுமில்லாதவாறு பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. ஆகவே நாட்டில் உரிய நிர்வாகம் இல்லை. உரிய நிர்வாகம் இல்லாத நிலையில் அரசை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

எனவே, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டு எதிர்க் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள தரப்பொன்றும் ஆதரவு வழங்கவுள்ளது.

ஆகவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதிவியிலிருந்து செல்லும் காலம் வந்துள்ளது. அதிலிருந்து தப்பிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திடீரென தீப்பிடித்து எரிந்தது ஓட்டோ





கொழும்பு,ஏப்.04

நாவலப்பிட்டி, தலவாக்கலை பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்று கெட்டபுலா சந்தியில் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

வீதியால் சென்று கொண்டிருந்த வேளையில் ஓட்டோவில் திடீரென தீப்பிடிக்க ஓட்டுநரும், பயணித்த மற்றொரு நபரும் அதனை விட்டு பாய்ந்துள்ளமையால் அவர்கள் இருவரும் எவ்வித தீக் காயங்களுமின்றி உயிர்தப்பியுள்ளனர்.

பிரதேசவாசிகள் இணைந்து தீயை அணைக்க முயற்சித்த போதும் சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான அந்த ஓட்டோ முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## பொலிஸ் அதிரடிப் படையிடம் சிக்கினார் பாதாள உலக 'சிட்டி'

கொழும்பு, ஏப். 04

பாதாள உலகக் குழுவின் தலைவரான அங்கொட லொக்காவின் நெருங்கிய சகா எனக் கருதப்படும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எலவலகே சரத்குமார எனப்படும் 'சீட்டி' என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கொட்டிகாவத்தை பிரதேசத்தில் உள்ள அவரின் வீட்டில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்படும் போது அவரிடம் இருந்த கைக்குண்டு ஒன்றை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர் தற்போது பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகிறார் பின்னர் அவர் திட்டமிட்ட குற்றச் செயல் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

## இன்று ஆரம்பமாகின்றது யாழ்.மருத்துவ கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் 40ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி யாழ். மருத்துவபீடமும், வடமாகாண சுகாதார அமைச்சும் இணைந்து நடத்துகின்ற மருத்துவ கண்காட்சி இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள இக் கண்காட்சி எதிர்வரும் 7 ஆம் திகதி வரை யாழ். மருத்துவ பீடவளாகத்தில் தொடர்ந்து இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அடிப்படை விஞ்ஞானம், மருத்துவத் துறையின் நவீன முன்னேற்றங்கள், நிகழ்கால சுகாதார சவால்கள், சுகாதார தொழில் வாய்ப்புக்கள், சிறுவர் ஆரோக்கியம், யௌவன பருவ ஆரோக்கியம், வயது வந்தோர் சுகாதாரம், முதியோர் சுகாதாரம் ஆகிய முக்கிய எட்டு தொனிப் பொருள்களில் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

மேலும், இந்தக் கண்காட்சியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மருத்துவ பீடம் அழைப்பு விடுத்துள்ளது.

## சிங்கள - முஸ்லிம் சகோதரத்துவ மாநாடு; யட்டிநுவரையில் பிக்குகளால் ஏற்பாடு



கொழும்பு, ஏப். 04

இலங்கை கலாசாரத்துக்கு ஒத்துப்போகும் சிங்கள, முஸ்லிம் சமூக மொன்றை யட்டிநுவரையிலிருந்து கட்டியெழுப்பும் நோக்கில் சிங்கள - முஸ்லிம் சகோதரத்துவ மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய இளம் பிக்குகள் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு எதிர்வரும் 07 ஆம் திகதி பிற்பகல் 02 மணிக்கு கண்டி, நெல்லிகல சர்வதேச பௌத்த நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நெல்லிகல சர்வதேச பௌத்த நிலையத்தின் விகாராதிபதி வணவத்துறகும்புறே தம்மாரத்தன தேரரின் முயற்சியால் நல்லிணக்கத்தை நோக்காகக் கொண்டு இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மின்வெட்டு அமுல்படுத்தப்படாது; இலங்கை மின்சார சபை அறிவிப்பு

கொழும்பு, ஏப். 04

மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்பொழுது நாட்டில் நிலவி வரும் வறட்சியான காலநிலையால் மின்சார உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபையின் அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மின்சார உற்பத்தி வீழ்ச்சி காரணமாக மின்வெட்டு அமுல்படுத்துவது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர் மின் உற்பத்தி நிலையங்களின் பிரதான நீரேந்து நிலைகளான விக்டோரியா, ரந்தெனிகல, கொத்மலை, காசல்ரீ, சமனலவெவ ஆகியனவற்றின் நீர் மட்டம் 50.2 வீதமாகக் காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் இந்தக் காலப் பகுதியில் குறித்த நீரேந்து பகுதிகளின் நீர்மட்டம் 35 வீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையிலும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (க)

# சிசு மர்ம மரணம்

காத்தான்குடி, ஏப்.04

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள மஞ்சந்தொடுவாய் கிராமத்தைச் சேர்ந்த 3 மாதங்களேயான பெண் சிசுவொன்று சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளது எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாத்திமா ஷெய்னப் (3 மாதங்கள்) எனும் பெண் சிசு சுகவீனம் காரணமாக நேற்றுக் காலை காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சற்று நேரத்தில் மரணித்து விட்டது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்குழந்தை எந்த நோயால் பீடிக்கப்பட்டிருந்தது என்பது பற்றி வைத்தியசாலை வட்டாரங்கள் ஆராய்ந்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றன.

குழந்தையின் மரணம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கோணேஸ்வரர் ஆலயத்தில் மட்டக்களப்புத் திருவிழா

திருகோணமலை,ஏப்.04

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சத்தின் 4ஆம் நாளான நேற்றுமுன்தினம் மட்டக்களப்புத் திருவிழா நடைபெற்றது.

கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான



திருவிழாவின் 4ஆம் நாள் மட்டக்களப்பு மாவட்ட திருவிழா இடம்பெற்றதுடன் எதிர்வரும் 16ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் ஏற்பாட்டில் இடம்பெற்ற பூசையில் மட்டக்களப்பு மாவட்ட இந்து வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் மட்டக்களப்பு இந்து மக்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது யாக பூசை வசந்த மண்டப பூசை மற்றும் சுவாமி வீதி வலம் வருதல் என்பன இடம்பெற்றமையுடன் பூசைகள் யாவும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.எஸ்.சண்முகரத்தினக் குருக்களால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை கூட்டமைப்பு வசம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

இதன்போது, த.தே.கூட்டமைப்பின் களுதாவளை வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஞானமுத்து யோகநாதன் தவிசாளராகவும், பிரதித்விசாளராக த.தே. கூட்டமைப்பின் கோட்டைக் கல்லாறு வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கனகராசா ரஞ்சினியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கும் பணிகள் முதன் முதலாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையில் நேற்றுக் காலை நடை பெற்றுள்ளது.

இந்த நிலையில் தவிசாளரை தெரிவு செய்யும் வகையில் திறந்த வாக்கெடுப்பு கோரியதற்கு இணங்க திறந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாணவன் மல்யுத்தத்தில் சாதனை



மட்டக்களப்பு,ஏப்.04

அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற மல்யுத்தப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று மட்டக்களப்பு இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

கடந்த 24 மற்றும் 25ஆம் திகதிகளில் கொழும்பு விளையாட்டடு அமைச்சின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் செல் வன் கிருஷ்ணகுமார் மிதுலாசன் எனும் மாணவரே கலந்துகொண்டு முதலாம் இடத்தைப் பெற்றிருந்தார்.

இலங்கை மல்யுத்த சபையினால் கனிஷ்ர பிரிவு வீரர்களுக்காக நடத்தப்பட்ட மல்யுத்தப் போட்டி கடந்த 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெற்றது. 79 கிலோ கிராமுக்கு உட்பட்ட திறந்த போட்டியாக இப்போட்டி நடைபெற்றது. மட்டக்களப்பு இந்துக்கல்லூரி ஆசிரியர் வே.திருச்செல்வம் இந்த மாணவனின் பயிற்சியாளராகச் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடினப் பந்து கிரிக்கெட்டை ஊக்குவிக்கும் நடவடிக்கை



மட்டக்களப்பு,ஏப்.04

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடின பந்து கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கடினபந்து தள விரிப்புக்கள் மட்டக்களப்பின் 5 பாடசாலைகளுக்கு மாவட்ட அரசாங்க அதிபரால் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

விளையாட்டடு அமைச்சால், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கடினப் பந்து கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிக்கும் முகமாக இரண்டாம் கட்ட நடவடிக்கையாக இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை, கிரான் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கான கடின கிரிக்கெட் பந்தாட்ட ஆடுகள தள விரிப்புக்களே வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தள விரிப்புக்களை, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களின் அனுசரனையுடன் மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் வழங்கி வைத்தார்.

விளையாட்டு அமைச்சால், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு கடினப் பந்து கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிக்கும் முகமாக கடந்த 2017ஆம் ஆண்டு பயிற்சி ஆடுகளங்கள் 3 பாடசாலைகளுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பெண் ஒருவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஏப்.04

மட்டக்களப்பு - பேத்தாளை பகுதியில் நேற்றுமுன்தினம் காணாமற்போன வயோதிப பெண் கருங்காலிச்சோலை ஆற்றில் இருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனக் கல்குடாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேத்தாளை விபுலானந்தா பாடசாலை வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகமுத்து (வயது85) என்பவர் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலையில் காணாமற் போயிருந்தார்.

இவரைக் குடும்ப உறவினர்கள் தேடிவந்த நிலையில் நேற்று மதியம் கருங்காலிச்சோலை ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கல்குடாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்பு நிலையம் முற்றுகை

திருகோணமலை,ஏப்.04

திருகோணமலை - சம்பூர் கட்டைபறிச்சான் காட்டுப்பகுதியில் இயங்கி வந்த கசிப்பு நிலையம் நேற்றுக் காலை பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது 54 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, ஒருஇலட்சத்து 17 ஆயிரத்து 750 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது என சம்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தக் காட்டுப்பகுதியில் கசிப்பு நிலையமொன்று மறைமுகமாக இயங்கி வருவதாக சம்பூர் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியதகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், இவரை மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்



மட்டக்களப்பு,ஏப்.04

மட்டக்களப்பு - பெரியகல்லாறு ஸ்ரீ சிவசுப்ரமணியர் ஆலயத்தின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் அடியார்கள் புடைசூழ இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதுடன் இதன்போது, சிறப்பு பூஜைகளும் நடத்தப்பட்டுள்ளன.

அத்துடன், வருடாந்த மஹோற்சவம் கதிர்காம ஆலய உற்சவத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெற்றுள்ளது.

# ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை: 12 மணிநேர விவாதத்தின் பின்னரே வாக்கெடுப்பு!

கொழும்பு, ஏப். 04

தேசிய அரசியலில் பெரும் பரப்பரப்புக்குள்ளாகியுள்ள பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று விவாதத்திற்கு எடுக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. இதன்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று இரவு 9.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது.


இதன்படி இன்று காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடவுள்ளதுடன் சபையின் தினப் பணிகள் நிறைவடைந்த பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை 12 மணிநேரம் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பின்னர் அரசியல் ரீதியாக பெருமளவில் சிக்கலான நிலைமை ஏற்பட்டது. இதன்படி ஆரம்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. இதன்படி கட்சிக்குள் மறுசீரமைப்புப் பணிகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டது.

இவ்வாறு இருக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டுஎதிர்க்கட்சி கொண்டு வந்தது. குறித்த பிரேரணை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் 55 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் கையளிக்கப்பட்டது.

இதன்பிரகாரம் கூட்டு எதிர்க்கட்சியின் 52 உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சி சார்பாக இராஜாங்க அமைச்சர் ரீ.பி ஏக்கநாயக்க, பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோரும் கையொப்பமிட்டிருந்தனர். எனினும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பிரேரணையில் கைச்சாத்திடவில்லை.

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான



நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பெரும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. இதன்படி பல்வேறு கட்சிகளுடன் பேச்சுகளை நடத்தி வருகின்றது.

அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் பல மட்ட சந்திப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன. இதற்கு அப்பால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலும் பல்வேறு மட்ட பேச்சு கள் இடம்பெற்றன.

அதேபோன்று, கூட்டு எதிர்க்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சிலருடனும் சுதந்திரக் கட்சியுடனும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் பல்வேறு மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக வாக்களிக்க போவதாக சுதந்திரக் கட்சியின் ஒருசிலரும் மக்கள் விடுதலை முன்னணியினரும் அறிவித்துள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதமருக்கு ஆதரவு வெளியிடும் என கட்சி வட்டார தகவல்கள் தெரிவித்தாலும் உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று விவாதத்திற்கு எடுக்கப்பட்டு இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

இதன்படி இன்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றம் கூடி வாய்மூல வினாக்களுக்கான விடை உட்பட தினப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீதான விவாதம் நடத்தப்படும்.

அதன்பின்னர் இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன்போது தனிநபர் பெயர் அழைத்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(கு)

## பிரதமரின் பொருளாதார குழு இரத்துச் செய்யப்படவில்லை

கொழும்பு, ஏப். 04

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொருளாதார குழு இரத்து செய்யப் படவில்லை என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.



மங்களை தெரிவிப்பு

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

பொருளாதாரக் குழு இரத்துசெய்யப்படவில்லை. அது இன்னும் அவ்வாறே இருக்கின்றது. இந்தக் குழு தொடர்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பாத்திரம் இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்பட்டது. பிரதமரின் பொருளாதாரக் குழு அவ்வாறே இருக்கின்றது.

ஜனாதிபதியின் பொருளாதாரக் குழுவினால் கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்கப் படுகின்றன. இந்தத் தீர்மானங்களை நடைமுறைப் படுத்தும் போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் பொருளாதாரக் குழு தீர்மானம் மேற்கொள்கிறது.

அவை மீண்டும் அமைச்சரவையில் முன்வைக்கப்படுகின்றன என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

## ஐ. நா. சிறுவர் சாசனம் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

கொழும்பு, ஏப். 04

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனம் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் இதனை புரிந்துகொள்ளும் வகையில் மாணவர்கள் மத்தியில் தெளிவுபடுத்தும் நோக்கில் சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் இலகு முறையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப் படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் அதன் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் மேல் மாகாண பாடசாலைகளில் நடை முறைப்படுத்தப்படும்.

நாட்டில் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அது குறித்து துரிதமாக நடவடிக்கை எடுக்கும்.

அவ்வாறான சம்பவங்கள் பற்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கோ அல்லது 1929 என்ற அவசர தொலை பேசி இலக்கத்திற்கோ அறிவிக்குமாறு அதிகார சபை பொதுமக்களைக் கேட்டுள்ளது.

## ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் தலைவராக ரஞ்சித் பெர்னாண்டோ

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு புதிய தலைவர், பணிப்பாளர் சபைக்கான 4 உறுப்பினர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் புதிய தலைவராக என்.டி.பி. வங்கியின் முன்னாள் தலைவர் ரஞ்சித் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், பணிப்பாளர் சபையின் ஏனைய உறுப்பினர்களாக மனோ தித்தவெல்ல, சுசந்த கட்டுகம்பொல, கலாநிதி ரொஷான் பெரேரா ஆகியோருடன் முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜெயம்பதியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் பணிப்பாளர் சபை சமர்ப்பித்த இராஜினாமா கடிதங்கள் கடந்த மார்ச் 29 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப் பட்டமையைத் தொடர்ந்து புதிய தலை வரும் பணிப்பாளர் சபையும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய எம்.பிக்களைக் கொண்ட குழு இன்று இலங்கை விஜயம் செய்கிறது

கொழும்பு, ஏப். 04

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்தக் குழுவினர் 6 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார்கள்.

இந்தக் குழு GSP + திட்டம் தொடர்பாக இலங்கையுடனான உடன்படிக்கையின் முதல் கட்டப் பெறுபேறுகளை மதிப்பீடு செய்வதற்காக இங்கு வருகை தருகின்றது என கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதரகம் தெரிவித்துள்ளது.




## இலங்கையில் வழமைக்கு மாறாக அதிக வெப்பமான காலநிலை

கொழும்பு, ஏப். 04

இலங்கையில் வழமைக்கு மாறாக அதிக வெப்பமான காலநிலை உருவாகியுள்ளது என வளிமண்டவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை வான்பரப்பில் காற்றின் வேகம் குறைவடைந்தமை உட்பட காலநிலை மாற்றங்கள் காரணமாக வெப்பநிலை அதிகரித்துள்ளது. இந்த வெப்பமான காலநிலை இந்த மாத இறுதி வரை தொடரும் எனவும் வளிமண்டவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த வெப்பமான காலநிலையால் உடலுக்கு தீங்கு விளையக் கூடும் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிக வெப்பம் காரணமாக இலகுவாக சருமம் வறட்சி அடையக்கூடும் என கொழும்பு தெற்கு வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தில்ஹார் சமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறான காலநிலையில் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தப்பிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

உடலைப் பாதுகாத்துக் கொள்ள நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 3 லீற்றர் நீர் அருந்துமாறு சுகாதாரப் பிரிவு கேட்டு கொண்டுள்ளது. கொழும்பு உட்பட பல பகுதிகளில் வழமையை விடவும் 4 செல்சியஸ் பாகை வெப்ப நிலை அதிகரித்துக் காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புங்குடுதீவில் புதுவருட விளையாட்டு விழா

புங்குடுதீவு, ஏப். 04

புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையமும் அம்பாள் விளையாட்டுக் கழகமும் இணைந்து சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை மாபெரும் விளையாட்டு விழாக்களை நடத்தவுள்ளன.

இவ் விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 35 மைல் சைக்கிள் ஓட்டம், பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டம், ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், 50 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டம் என்பன நடத்தப்படவுள்ளன. (இ)

# தினசரி ராசி பலன் (04.04.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பிவருடம் பங்குனித்திங்கள் 21 ஆம் நாள் புதன்கிழமை சதுர்த்தித்திதி மாலை 5.32 மணி வரை பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்: விசாகம். காலை 7.31 மணி வரை பின்னர் அனுஷம். சித்தாமிர்தயோகம் முழுவதும்.*

***ராகுகாலம்*** *- பகல் 12.13 மணி முதல் 01.45 மணி வரை*

***சுபநேரம்*** *- மாலை 04.34 மணி முதல் 06.03 மணி வரை*

***திவசம் செய்ய வேண்டிய திதி***- *பங்குனி மாத தேய்பிறை சதுர்த்தி.*

***பிறந்த நட்சத்திர வழிபாடு:*** *அனுஷம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். உத்தியோகத்தர்கள் உண்மையாக உழைத்தாலும் மேலதிகாரிகளிடம் நல்ல பெயர் கிடைப்பது கடினம்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவினங்கள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகரிக்கும். பதவி உயர்வு தள்ளிப் போகும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு இனிமையாக இருக்கும். பிள்ளைகளின் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் காணப்படும்.

**கடகம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். அரச ஊழியர்கள் சிறப்பாகப் பணியாற்றி பதவி உயர்வுகளைப் பெறுவார்கள்.

**சிம்மம்** சமபலன்கள் காணப்படுகின்றன. எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். உடல் நலனில் கவனம் தேவை. சிலர் கடன் பட்டு சொத்து வாங்குவார்கள். பண விஷயத்தில் யாருக்கும் பிணை போடக் கூடாது.

**கன்னி** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் ஓரளவு கிடைக்கும். வியாபாரத்தில் சம லாபம் கிடைக்கும்.

**துலாம்** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். சகோதர வழியால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். வீடு, வாகன வசதிகள் பெருகும். தாய் வழிச் சொத்துக்கள் வந்து சேரும்.

**விருச்சிகம்** இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். பிரிந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும்.

**தனுசு** துன்பமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். உறவினர்களுடன் பகைமை உண்டாகும். பிள்ளைகளின் சுப காரியங்கள் தடைபட வாய்ப்புள்ளது.

**மகரம்** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வீடு, வாகன வசதிகள் பெருகும். சிலருக்கு தொழில் ரீதியாக வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**கும்பம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும் திருமணம் கை கூடுவதில் தாமதமாகும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையும்.

**மீனம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிற் பிரிவினர் சங்கடங்கள் நீங்கி சந்தோஷமடைவார்கள். வியாபாரம் நல்ல முறையில் அமையும்.

**சந்திராட்டம நாள்:அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## மஹியங்கனையில்

# துப்பாக்கி உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

கொழும்பு, ஏப். 04

மஹியங்கனை - தம்பான பிரதேசத்தில் சட்டவிரோத மான முறையில் இயங்கி வந்த துப்பாக்கி உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

பதுளை குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பின்போது, அங்கு சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் சில இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளமையோடு, அவற்றை உற்பத்தி செய்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மஹியங்கனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஆலய உற்சவங்கள்

புங்குடுதீவு, ஏப்.04

புங்குடுதீவு மடத்துவெளி வயலூர் ஸ்ரீபால சுப்பிரமணிய சுவாமி ஆலய பிரமோற்சவப் பெருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் ஆலய பிரம்மோற்சவம் 10 தினங்கள் நடைபெறவுள்ளது, எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

* * * * *

நயினாதீவு, ஏப்.04

நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த ஆலய மகோற்சவம் 11 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை புத்தாண்டு தினத்தன்று முற்பகல் 10.40 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

**யாழ் பிரதேசத்தில்** - கோவில்வயல், கோத்தாண்டார்குளம், இயக்கச்சி, விநாயகபுரம், இயக்கச்சி இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும் -

**வவுனியா பிரதேசத்தில்** - அட்டம்பஸ் கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், கொக்கெலியவிலிருந்து ஓமந்தை வரை, ஓமந்தை வீட்டுத்திட்டம், ICTகல்லூரி, Union Alliance Ltd, AMP ஓமந்தை, ஓமந்தை மீன்பிடிவலைத் தொழிற்சாலை, பர நட்டாங்கல், நொச்சிமோட்டை, புதிய சின்னக்குளம், கொக்கிளாய், சாந்த சோலை ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்** - தலை மன்னார்ப் பிரதேசம் ஒரு பகுதி, கட்டையடம்பன், மளவராயர் கட்டையடம்பன் ஆகிய பிரதேசங்களிலும்,- மின்விநி யோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த போலி மின் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, ஏப். 04

கொழும்புப் பிரதேசத்தில் விநியோகிப்பதற்கு வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை போலி மின் உபகரணங்களை நுகர்வோர் விவகார அதிகார சபை கைப்பற்றியுள்ளது.

இந்த மின் உபகரணங்கள் எஸ்.எல்.எஸ். வர்த்தக தர சான்றிதழ் இன்றி வேறு பெயரில் விற்பனைசெய்வதற்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன என அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

# ஜி.சீ.ஈ (சாதாரணதர) பரீட்சை பெறுபேறு

## யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

எஸ்.கம்சுயா - 8A, C, வை.சங்கீர்தன சர்மா - 5A, 3B, C, வி.ரெனிஸ்ரன் - 5A, 3C, எஸ்.சுதர்சன் - 4A, 3C, S, எஸ்.சிவரமணி - 3A, 4B, C, S, ரி.கேமிஷா - 3A, 2B, 3C, S, எஸ்.சாமினா - 3A, 2B, 2C, 2S, எஸ்.சுமீனா - 3A, B, 2C, 2S, ரி.தலக்சனா - 3A, B, C, 2S

# கிளிநொச்சிப் பகுதியில் பிறப்பு வீதம் குறைவு!

*கிளிநொச்சி, ஏப். 04*

*கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் 1 இல் மாணவர்கள் இணைவதில் காணப்படுகின்ற வீழ்ச்சி நிலையானது கிளிநொச்சி மாவட்டத்தின் பிறப்பு வீதத்தின் வீழ்ச்சியைக்காட்டுகிறது என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்ஜோன்குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.*

*கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே இந்த விடயத்தை வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.*

# 'பலிக்களம்' ஆற்றுகை

சுன்னாகம், ஏப். 04

உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும் இறைமகன் இயேசுவின் வரலாற்றுச் சித்திரமான 'பலிக்களம்' எனும் ஆற்றுகை இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது. (இ)

# சைவப் புலவர் சங்க செயற் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.04

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் மு.திருஞான சம்பந்த பிள்ளைதலைமையில்இடம்பெறவுள்ள கூட்டத்துக்கு 2018 ஆம் ஆண்டுக்கான இளஞ் சைவப் புலவர் மற்றும் சைவப் புலவர் பரீட்சை நடத்துவது மற்றும் ஒருங்கமைப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே, அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

## ஐ.நா. சபை அமர்வுகள்

# தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

கடந்த சில நாள்களுக்கு முன்பு ஐ.நா.மனித உரிமை சபையின் 37ஆவது கூட்ட தொடர் ஜெனீவாவில்நடந்துமுடிந்துள்ளது. இது பற்றி சுருக்கமாக கூறின், இது பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றே கருத முடியும். பேச்சு சுதந்திரத்தின் அடிப்படையில் விரும்பியோர் விரும்பியதை கூற முடியும். ஆனால், ஐ.நா. விதி முறைகள், அணுகு முறைகள், சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால்,இதற்கு மேலாக 37ஆவது கூட்டத் தொடரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் எதையும் பெற்றுவிட முடியாது.



### கோமாளி மாரப்பன

ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை ஐ.நாவின் விசேட பிரதிநிதி பவுலோ கிறீவ் ஆகியோரின் அறிக்கை மற்றுமல்லாது சில முக்கிய அங்கத்துவநாடுகளின் அறிக்கைகள் இலங்கை அரசை ஆட்டம் காண வைத்துள்ளது என்பதே உண்மை.

மனித உரிமை சபையில் பிரசன்னமாகியிருந்த இலங்கையின் வெளிநாட்டு அமைச்சார் மாரப்பனவை இலங்கை மீது தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகளின் பிரதிநிதிகள் சர்க்கஸில் நடிக்கும் ஒரு கோமாளியாகவே பார்த்தனர்.

காரணம் இவர்களினால் மனித உரிமை சபையில்பங்குகொள்வோருக்கு கொடுத்த ஆவணம் மிகைப்படுத்தப்பட்டதாகவும் உண்மைகளுக்கு அப்பாற்பட்டதாகவே காணப்பட்டது. ஐ.நா.மனித உரிமை சபையின் தீர்மானத்தில் கூறப்பட்ட எந்த உருப்படியான விடயங்களையும் தமது நாட்டில் செய்யவில்லையென்பதை, எந்த வெளிநாட்டு அமைச்சர் மனித உரிமை சபையில் ஒத்துக் கொள்ளுவார்? ஆகையால் மாரப்பனவின்திருகுதாளம்மனிதஉரிமைசபைக்கு புதுமையானது ஒன்றல்ல.

நடந்து முடிந்த 37ஆவது கூட்டத் தொடரில்தமிழர்தரப்புஎனகூறும்பொழுது – வடக்கு – கிழக்கிலிருந்து வருகை தந்த பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள் உட்பட அரசியல்வாதிகள், பத்திரிகையாளரும் அடங்குவர். அரச தரப்பு என கூறுவதானால், வெளிநாட்டு அமைச்சர், உள்ளூராட்சி அமைச்சர் உட்பட பல முக்கிய பிரதிநிதிகள் அரசு சார்பாக வருகை தந்திருந்தனர்.

புலம்பெயர் சங்கங்களின் சார்பில் பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, பிரித்தானியா,ஜேர்மனி,கனடா,அமெரிக்கா, ஆஸ்திரேலியா,இந்தியா உட்பட வேறு பல நாடுகளிலிருந்தும் வருகை தந்திருந்தார்கள். புலம்பெயர் ஊடகங்களின் பிரதிநிதிகளும்,முகநூல் விற்பனையாளர்களும் வழமை போல் வருகை தந்திருந்தார்கள்.

பௌத்த சிங்கள தரப்பு என கூறுவதானால் முன்னாள் பாதுகாப்புப் படையில் கடமையாற்றியவர்களும் புலம்பெயர் தேசங்களில் வாழும் முன்னாள் பாதுகாப்புப் படையினரும், சிங்கள ஊடகவியலாளர் என்று கூறப்படுபவரும் மனித உரிமை சபையில் பிரசன்னமாகியிருந்தனர்.

### சிங்கள பௌத்தவாதிகள்

இலங்கைத்தீவின் விடயத்தில், மனித உரிமை சபையில் இப்படியாக நூற்றுக் கணக்கானோர்பங்குகொள்வதன்மூலம், இலங்கையில் முன்பிருந்த பயங்கரவாதம் தவிர்ந்த வேறு எந்த பிரச்சினையோ சர்ச்சைகளோ இல்லை என்ற சிங்கள பௌத்தவாதிகளின் விவாதம் அடிபட்டுப் போகிறது. அடுத்து, இலங்கை ஜனாதிபதியின் ஒத்தாசையின்றியே, இலங்கை தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது என்ற பௌத்த சிங்களவாதிகளின் விவாதத்தை மனித உரிமை சபை ஏற்றுக் கொள்ளவில்லை.

காரணம், இலங்கையின் ஜனாதிபதி, தீர்மானத்திற்கு எந்தவித சம்பந்தமுமில்லையானால், இன்று ஒரு வருடத்திற்கு மேலாகியும் எதற் காக இலங்கை ஜனதிபதியினால் அது பற்றி உத்தியோகபூர்வமாக மனித உரிமை சபைக்கு அறிவிக்க முடியவில்லை போன்ற கருத்துக்கள் சபைக்கு வெளியில் தெரிவிக்கப்பட்டன.

அடுத்து, தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை ஒழுங்காக வாசித்து ஆராயாது, தமிழீழ விடுதலைப் புலிகளின்குற்றச்செயல்களைமனித உரிமை சபை அலட்சியம் செய்துள்ளது என்ற சிங்கள பௌத்தவாதிகளின் கருத்து, சபையில் பலரை வியக்க வைத்தது. ஒட்டுமொத்தமாக,ஜெனீவாவிற்கு வருகை தந்துள்ள சிங்கள பௌத்தவாதிகளின் கருத்தை ஆராயும் வேளையில், இவர்கள் தாம் செய்துள்ள தவறுகளை நியாயப்படுத்துவதற்காகவும், வடக்கு – கிழக்கு ஒட்டுமொத்தமாக சிங்கள பௌத்த மயமாக மாற்றப்படும் வரை, நேரம் கடத்தும் வேலைத்திட்டமாகவே காணப்பட்டது.

### முஸ்லிம்கள் விவகாரம்

கடந்த மாதம் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடைபெற்ற இனக்கலவரம், இன்று ஐ.நா.மனித உரிமை சபை வரை கொண்டுவரப்பட்டு, சர்வதேசத்தின் கண்களைத் திறக்கவைத்துள்ளது.



இந்த அடிப்படையில் 37ஆவது கூட்டத் தொடர் வேளையில், இரு பக்க கூட்டங்கள், இலங்கை தீவில் முஸ்லிம்கள் தாக்கப்படுகின்றமையை மூலக் கருவாகக் கொண்டு நடத்தப்பட்டது. இக் கூட்டங்களில் பல சர்வதேச முக்கியஸ்தர்கள் உரையாற்றினார்கள். இதில் ஒரு கூட்டத்திற்கு வருகை தந்திருந்த சில பௌத்த சிங்களவாதிகள், தாம் எங்கு எதைப் பேசுகிறோம் என்பதை மறந்து தமது தீவிர போக்கை காண்பித்தவேளையில்,இவர்களுக்கு மனிதஉரிமை, மனிதாபிமானம்என்றால் என்ன?, அவற்றை எப்படியாக அரசுகள் மதிக்க வேண்டும் என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்றுஜஸ்மீன்சூக்காபோன்ற சர்வதேச புள்ளிகள் உரையாற்றிய ஒரு கூட்டத்தில், புலம்பெயர் வாழ் தமிழர் தரப்பின் கடுமையான விவாதத்தை தாங்க முடியாத பௌத்த சிங்களவாதிகள், கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால், துரதிஷ்டவசமாக வேறு ஒரு பக்கக் கூட்டத்தில், சிங்கள பௌத்தவாதிகளுக்கும் புலம்பெயர் தமிழர்கள் சிலருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு, இறுதியில் கைகலப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டது.

### தமிழர் தரப்பு

வழமைக்குமாறாக இம்முறை, வடக்கு, கிழக்கில் காணாமற்போனோரின் பெற்றோர், சகோதர சகோதரிகள், உறவினர் மனித உரிமை சபைக்கு வருகை தந்திருந்தனர். ஆனால், இவர்களும் புலம்பெயர் வாழ் தமிழர்கள் போன்று மூன்று நான்கு வேறுபட்ட பிரிவுகளாகவே வருகை தந்திருந்தனர். இவர்களில் ஒரு பிரிவினர், வவுனியாவில் சிங்கத்தின் ஒருங்கிணைப்புடன் வருகை தந்திருந்தனர். இவர்கள் மனித உரிமை சபையில் சகலரையும் சந்தித்து விடயங்களை நல்ல முறையில் எடுத்துக் கூறியிருந்தனர். இதேபோல், இரணைதீவிலிருந்து 28 வருடங்களாக இடம் பெயர்ந்து வாழும் மக்களின் பிரதிநிதியாக ஒருவர் வருகை தந்திருந்தார்.

இவர் இரணைதீவு பற்றிய சரித்திரம், இடப்பெயர்வு, தற்போதைய நிலை போன்றவற்றை அறிக்கையாகவும், புத்தகமாகவும் மனித உரிமை சபையில் கலந்து கொண்ட சகலருக்கும் வழங்கியிருந்தார்.

இன்னுமொரு குழுவில் மூவர் மனித உரிமை சபைக்கு வருகை தந்திருந்தார்கள். உண்மையை கூறுவதானால் இவர்களது செயற்பாடு என்ன என்பதை பலரால் அறிந்திருக்க முடியவில்லை. காரணம், இவர்களை அழைத்தவர்கள், இவர்களை மற்றவர்களுடன் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. இவ்வளவு தூரம் சிரமங்களுக்கு மத்தியில் பிரயாணம் செய்து வந்தவர்களுக்கு ஒரு பின்னடைவாகவே காணப்பட்டது. இதேவேளை, தனது மகனை தேடும் ஒரு தகப்பனார், பல சிரமங்களுக்கு மத்தியில் ஜெனீவா

■ எஸ்.வி.கிருபாகரன்

வந்திருந்தார். இவர்எண்ணிவந்தளவிற்கு அங்கு தனது விண்ணப்பங்களை கையளிப்பதற்கான உதவிகளோ ஒத்தாசைகளோ அவருக்கு போதியளவு கிடைக்கவில்லை என்பது மிக கவலைக்குரிய விடயம். நாமாக வலிந்து இவருக்கு உதவிசெய்ய முயற்சித்திருந்தால் அவர் அந்தக் குழுவினால் ஒதுக்கப்படுவார் என்பது யாவரும் அறிந்த விடயம்.

### பாதுகாப்பு சபை

இதேவேளை, தமிழர் தரப்பில் சிலர், மனித உரிமை சபை, சிறிலங்கா விடயத்தை பாதுகாப்புச் சபைக்கு மாற்ற வேண்டும் என்ற முழக்கத்துடன் காணப்பட்டனர். கோரிக்கை நன்றாகத் தான் இருக்கிறது, ஆனால் ஐ.நா.மனித உரிமை சபையை பொறுத்த வரையில்,தற்போதையநிலையில் இது நடைமுறைக்கு சாத்தியமானதா? என்பதை இவர்கள் ஆராய வேண்டும்.


இலங்கையில் தற்பொழுது உள்ள நல்லாட்சி என அழைக்கப்படும் பொய்யாட்சி, முன்னைய அரசு போல் அல்லாது, ஐ.நா. மனித உரிமைசபை, மனித உரிமை ஆணையாளருடன் நன்றாக ஒத்துழைக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

### பிரதமர் ரணிலுக்கு எதிரான பிரேரணை:

# தமிழருக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க கூட்டமைப்புக்கு மிக நல்லதொரு சந்தர்ப்பம்

## கணேஸ்வரன் வேலாயுதம் சுட்டிக்காட்டு



கூட்டு எதிரணியினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் அதற்கு ஆதரவாகவோ அல்லது ஆதரவு இன்றியோ வாக்களிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்திருந்தாலும் அது சாயான முறையில் தமிழ் மக்களின் நலன் கருதியதாக அமைந்திருக்க வேண்டும் என்று சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் தொவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

தமிழ் அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனுக்கு பொது மன்னிப்புக் கோரி கருணை மனுவொன்றை ஜனாதிபதியின் கவனத்திற்கு வட மாகாண ஆளுநர் ஊடாகவும் மற்றும் கண்டி அஸ்கிரிய பீடம் மல்வத்த மகாநாயக தேரர்கள் ஊடாகவும் மற்றும் தென்மாகாண சபை உறுப்பினர் வத்தேகம தேரர் ஆகியோர் மூலமும் பொது மன்னிப்பு வழங்க பரிந்துரை செய்யுமாறு கோரி சிவன் அறக்கட்டளை நிறுவனத்தினால் மனுக்களை வழங்கியுள்ளோம்.

எனவே ஜனாதிபதி சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்ற உத்தரவாதத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் கூட்டமைப்பினர் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

யுத்தம் முடிவடைந்து ஒன்பது வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் இலங்கையில் பல்வேறுபட்ட சிறைச்சாலைகளில் 110 இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் தங்கள் விடுதலை தொடர்பாக நீண்ட காலமாக பல போராட்டங்களைச் செய்து வருகின்றனர்.

இதற்கு வெகுவிரைவில் தீர்வைப் பெற்றுத் தருவேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஜனாதிபதி உறுதிமொழி வழங்கியும் இதுவரை எந்த அரசியல் கைதிகளும் விடுதலையாகவில்லை. இது இன்னும் தொடர்கதையாகவே இருக்கிறது.


இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவித்தல், காணாமற் போனவர்கள் பற்றி கவனம் செலுத்துதல், மீள் கட்டமைப்பு வசதிகள், அரசியல் தீர்வு உள்ளிட்ட பல விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை.

எவ்வாறாயினும் இந்த நிலைமையில் கவனத்திற் கொண்டு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய வகையில் அரசியல் காய் நகர்த்தலை மேற்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமருக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை புத்திசாதூரி யத்துடன் கையாள வேண்டிய தேவை இருக்கிறது.

பிரதமர் ரணிலுக்கு எதிராக வாக்களித்தால் அதிகம் நன்மை கிடைக்குமா அல்லது அவருக்கு ஆதரவாக வாக்களித்தால் அதிகம் நன்மை கிடைக்குமா எனப் பகுப்பாய்வு செய்து இந்தச் சந்தப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கப் போகின்றது.

எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சரியாகப் புரிந்து இரு தரப்பினருடனும் பேசி ஒரு வலுவான முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டி நிற்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியும். ஒரு பலமான சக்திவாய்ந்த அமைப் பாக நின்று தமிழ் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முனைவார்கள் என்று எதிர் பார்க்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ





அரசியல் கைதியான கிளிநொச்சியைச் சேர்ந்த ஆனந்தசுதாகரனைப் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்யுமாறு கோரி சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன் கண்டி மல்வத்த அனுநாயக அனமெதுவ ஸ்ரீ தம்ம தாச தேரரிடம் கருணை மனு ஒன்றைக் கையளிக்கின்றமையையும் கணேஸ்வரன் வேலாயுதத்துக்குத் தேரர் பழவகைளை அன்பளிப்பாக வழங்குகின்றமையையும் இங்கு படங்களில் காணலாம். (இ



பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் ‘சுரக்ஸ’ இலவச காப்பீட்டு திட்டத்தின் கீழ் அண்மையில் திருகோணமலையில் ஏற்பட்ட வாகன விபத்தில் மரணம் அடைந்த மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையை சேர்ந்த மாணவன் நகுலகுமார் துசிகரனின் தந்தையிடம் இழப்பீட்டுக்கான காசோலையை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரி கிளை முகாமையாளர் கே.பிரதீபன் கையளிக்கின்றார். அருகில் பாடசாலை அதிபர் காணப்படுகிறார். (இ-21)



# பழைய இரும்பு வியாபாரிகள் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



யாழில் மீள்குடியேறி பழைய இரும்பு வியாபாரத் தொழிலில் ஈடுபடும் முஸ்லிம் வியாபாரிகளின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும். கிராமங்களுக்குச் சென்று நேர்மையான வகையில் வியாபாரம் செய்வோர் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கின்றனர். இனி வரும் காலங்களில் குறைந்தளவு ஒலியுடன் கூடிய வாகனத்தில் வரும் வியாபாரிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படும். ஒலி பெருக்கிலி இல்லாமல் களவு நோக்கத்துடன் சுற்றித் திரிபவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று யாழ். பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பு அதிகாரி துஷித கூறினார்.

யாழ். அராலி வீதியிலுள்ள சன சமூக நிலையத்தில் மாநகர சபை உறுப்பினர் கே.எம். நியாஸ் தலைமையில் பழைய இரும்பு வியாபாரிகளின் பிரச்சினை சம்பந்தமாக பொலிஸாருடன் நடத்திய கலந்துரையாடலில் தொடர்ந்து துஷித உரையாற்றும் போது;

பொம்மைவெளிக் கிராமத்தில் கஞ்சா, போதைவஸ்து பாவிப்போர் மற்றும் துஷண வார்த்தைகள் பேசி கிராமத்துக்கு கெட்ட பெயரை ஏற்படுத்துவோர் மீதும் கடும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் எனக் கூறினார். இக் கலந்துரையாடலில் சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவர் மற்றும் பொலிஸ் பொறுப்பாளரும் கலந்து கொண்டனர். (இ-19)









புலோலி குரும்பைகட்டி சன சமூக நிலையத்தின் புதிய மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதனால் திறந்து வைக்கப்பட்டது

70 ஆண்டுகாலமாக பழைய கட்டடத்தில் இயங்கி வந்த புலோலி குரும்பைகட்டி சன சமூக நிலையம் தற்பொழுது பல்வேறு வசதிகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமும், புலோலி கிராமத்தில் வசித்து தற்பொழுது புலம்பெயர் தேசங்களில் வசிப்பவர்களினாலும் உதவி கள் வழங்கப்பட்டிருந்தன. (இ

# ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கு அனைத்தையும் செய்து விட்டோம்

## சதித்திட்டத்திற்கு உரிய பாடம் புகட்டுவோம் என்கிறார் அகிலவிராஜ் காரியவசம்



கொழும்பு, ஏப். 04

நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு வேண்டிய அனைத்தையும் செய்து விட்டோம். இந்தச் சதித் திட்டத்திற்கு இன்றைய தினம் நாம் உரிய பாடம் புகட்டுவோம்.

இந்த வெற்றியுடன் 2020 ஆம் ஆண்டின் நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கான போராட்டத்தை ஆரம்பிப்போம்.

எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க வேண்டியது 2015 ஆம் ஆண்டு மக்கள் ஆணையை பெற்ற அனைவரினதும் பெரும்பொறுப்பாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளரும் அமைச்சருமான அகில விராஜ்காரியவசம் தெரிவித்தார்.

தேசியப் பட்டியலில் வந்தவர்கள் மக்கள் ஆணைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து ஆட்சியை கவிழ்க்க முடியுமா என்று பார்க்கின்றனர். அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புறக்கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது 2015 மக்கள் ஆணைக்கு எதிராக செயற்பட்டவர்களே முன்னிலை வகித்து செயற்படுகின்றனர்.

எனவே, 2015 ஆம் ஆண்டில் மக்கள் ஆணை கிடைக்கப்பெற்றவர்களுக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அதனை தோற்கடிக்க வேண்டிய பெரிய பொறுப்பு உள்ளது.

எனவே நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்பின்போது மக்கள் ஆணையை வெற்றி செய்ய வேண்டும். 2015 ஆம்ஆண்டுமக்கள்ஆணைக்கு எதிராகச் சதித் திட்டம் தீட்டியவர்களே பிரதமருக்கு எதிராக இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர்.

தேசியப் பட்டியலில் வந்தவர்கள் மக்கள் ஆணைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து ஆட்சி கவிழ்க்க முடியுமா என்று பார்க்கின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற முயல்கின்றனர். எவ்வாறாயினும் 2015 இல் கிடைக்கப்பெற்ற மக்கள் ஆணையை பின் நகர்த்த நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்தே தீருவோம். இது உறுதியாகும். இந்த வெற்றியுடன் 2020 ஆம் ஆண்டின் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கான போராட்டத்தை ஆரம்பிப்போம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து விட்டோம். ஆகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்பது உறுதியாகி விட்டது. அதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. இந்த பிரேரணையை தோற்கடிப்பதற்கு எதிர்பாராதவர்கள் எமக்கு ஆதரவு வழங்குவார்கள்.

எனினும், மக்கள் ஆணையை கூடப் பெறாமல் தேசிய பட்டியலின் ஊடாக வந்து அரசில் அமைச்சு பதவிகளை பெற்றுக் கொண்டு ஒரு சிலர் எமக்கு எதிராகச் செயற்படுகின்றனர். எம்முடன் இருக்க முடியாவிடின் அமைச்சு பதவிகளைத் துறந்து விட்டு வெளியேற வேண்டும். எனவே இவர்களுக்கு எதிராக இன்றைய வாக்கெடுப்பில் நாம் முன்னிற்போம்.

சதித்திட்டம் தீட்டி ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியில் இணைந்து அரசியல் செய்யப் பார்க்கின்றனர். நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க முரண்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். எனவே இந்த சதித்திட்டத்திற்கு நாம் உரிய பாடம் புகட்டுவோம்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமக்கு உரிய சமிக்ஞை கிடைத்துள்ளது. இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பான முக்கிய தீர்மானங்களை எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் எடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## சிலாபம் வீதியில் விபத்து: 35 பெண்கள் படுகாயம்

புத்தளம் – சிலாபம் பிரதான வீதியில் ஆராச்சிகட்டு – ஹலம்பவட்டவன பிரதேசத்தில் நேற்றுக் காலைஇடம்பெற்ற வாகன விபத்தில் 35 பெண்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆடை தொழிற்சாலை ஒன்றிற்கு பணியாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தின்போது பஸ்ஸில் சுமார் 40 பெண் பணியாளர்கள் பயணம் செய்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த பெண்கள் சிலாபம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். ஆராச்சிகட்டு போக்குவ ரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(கு)

### யாழ். போதனா வைத்தியசாலை

## முகத்தாடை வாய் சத்திரசிகிச்சைப் பிரிவில் மேலதிக சிகிச்சைகள் வழங்குவதற்கு ஏற்பாடு

### சம்பந்தப்பட்ட நிபுணர்கள் வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ். போதனா வைத்தியசாலை முகத்தாடை வாய் சத்திரசிகிச்சைப் பிரிவில் ஏப்பிரல் மாத பிற்பகுதியில் இருந்து மேலதிக சிகிச்சைகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நாட்டின் பல பாங்களில் இருந்து முகத்தாடை சத்திரசிகிச்சை நிபுணத்துவக் குழு யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரி. சத்தியமூர்த்தி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கிவரும் முகத்தாடை வாய் சத்திரசிகிச்சைப் பிரிவானது முகதாடை சம்பந்தமான நோய்களையும், குறைபாடுகளையும் கண்டறிவதுடன் அதற்குரிய சிகிச்சைகளையும் மேற்கொண்டு வருகின்றது.


இதன்படி -

1. பிறப்பிலிருந்து வருகின்ற குறைபாடுகள்
2. முக அமைப்பு சீராக்கல் - தாடை அமைப்பு, காது அமைப்பு, நெற்றியின் அமைப்பு
3. கட்டிகள், புற்றுநோய் கட்டிகள் அகற்றல்.
4. விபத்துக்களால் ஏற்படுகின்ற முகதாடை என்பு உடைவுகளைச் சீரமைப்புச் செய்தல்.
5. பாரிசவாத நோயால் முகத்தசைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளை சீராக்கல் போன்ற பல சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு சேவையாக முகத் தாடை சத்திரசிகிச்சை நிபுணத்துவக் குழாம் பல பாகங்களிலிருந்தும் யாழ்ப்பாணம் வருகை தந்து ஏப்பிரல் மாத பிற்பகுதியில் மேலதிக சிகிச்சைகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

இதில் பயன்பெற விரும்புவோர் யாழ். போதனா வைத்தியசாலை முகத் தாடை வாய் சத்திரசிகிச்சைப் பிரிவில் கிழமை நாள்களில் நேரடியாகவும், 0779938324 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

# பிரதமர் ரணிலுக்கு பஸில் ராஜபக்ஷ ஆதரவாம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னாள் அமைச்சர் பஸில்ராஜபக்ஷ ஆதரவுவழங்கியுள்ளார் என கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பஸில் ராஜபக்ஷ எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்காமல் இருப்பதற்கான நிலைப்பாட்டிலேயே பஸில் உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சி குழுவினர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் போது, பஸிலின் ஆதரவு கிடைப்பதாகத் தெரியவில்லை எனவும் அரசியல் செயற்பாடுகளுக்கு தலைமை வழங்கும் பஸில் ஆதரவு வழங்காமல் அமைதியாக இருக்கிறார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் இரண்டு வருட காலங்களுக்குள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசை நடத்திச் செல்ல சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அதன் ஊடாக பிரதமர் மீதான மக்கள் எதிர்ப்பு மேலும் அதிகரித்து அடுத்த தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி பெரும் வெற்றியை பெறும் எனவும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக செயற்படும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தொடர்புடைய சில குழுக்களுடன் பஸில் ராஜபக்ஷ நடத்தும் கலந்துரையாடல் தொடர்ந்து நடத்தப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

எப்படியிருப்பினும் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இதுவரையிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கையொப்பமிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir



‘நல்லாட்சி’ என்ற மாயையை நம்பி தமிழருக்கு ஏமாற்றமே

# எங்களின் வளங்களை எங்களிடமே விட்டு விடுங்கள்

## சந்திரிகாவுக்கு சிவநேசன் கடிதம்

### இதுவே எமது உறுதியான கோரிக்கை

வளமான எங்களின் வாழ்விடங்களைஎங்களுக்குமீண்டும் தாருங்கள். எங்களை எங்கள் நிலங்களில் தொழில்களையும் ஈடுபட அனுமதியுங்கள் எங்கள் நாளாந்த வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல, எங்கள் வளங்களின் ஆதாரத்தைஎங்களிடமேவிட்டுவிடுங்கள். அதுவே எமது உறுதியான திடமான கோரிக்கையாகும்.

– இவ்வாறான கோரிக்கையுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதியுள்ள நீண்ட கடிதத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் குறிப்பிட்டுள்ளார்.

தேசியநல்லிணக்க மற்றும் சகவாழ்வு செயலகம் என்ற முகவரியிட்டு சந்திரிகாவுக்கு எழுதியுள்ள அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னரான ஆட்சி வரலாற்றில் புதுமையாக, நல்லாட்சி எனும் பெயரில் உரு வாக்கப்பட்ட தேசிய கட்சிகளினது கூட்டாட்சி, அதனை நம்பிய சிறுபான்மை மக்களினது நம்பிக்கைகளை மெல்ல மெல்ல சிதைத்து வருகின்றது என்பதுவே எமது அனுபவமாக அமைகின்றது.

குறிப்பாகத் தமிழ் மக்களின் தரப்பு ஆட்சிமுறைமையில் எதிரணியாக இருந்தபோதிலும்கூட, இலங்கைநாடாளுமன்றத்தின் பாரம்பரியங்களை மீறி அரசதரப்பினரின் செயற்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க அளவு ஆதரவை வழங்கி வந்துள்ளது.

தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை, அரசியல் கோரிக்கைகளை, சமூக முன்னேற்றத்தை, ஒளிமயமான எதிர்காலத்தை வென்றெடுக்க எமது தரப்பினரின் ஆதரவு அவசிய மானதொன்று என்று இலங்கை தமிழர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் கரையான் புற்றினைப் போல் எமது வாழ்விடங்களை அரித்து கபளீகரப்படுத்துவதையும், கானல் நீராய் எம்மக்களின் கனவுகள் எம்மை கைவிட்டுப்போவதையுமே நாம் காண்கின்றோம்.

முப்பது வருட அறவழிப் போராட்டத்திற்கு வித்திட்ட, முப்பது வருட ஆயுதப் போராட்டத்துக்கு நியாயமான முறையில் வலுச்சேர்த்த தமிழின விரோத நடவடிக்கைகள் அனைத்துமே தேசிய நல்லிணக்கம் என்ற போர்வைக்குள் கபடமாக அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

யுத்த காலத்தில் மந்த கதியில் இருந்த இவ்வாறான நடவடிக்கைகள் எமது கொல்லைப்புறத்திலும், நடு முற்றத்திலும் பரவலாக, வேகமாக எந்தவிதமான தடைகளும் இன்றி, கேட்பாரின்றி தொடர்ந்த வண்ணமுள்ளது.

‘மகாவலி அபிவிருத்தி’ என்ற பெயரில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட எந்தத் திட்டங்களும் தமிழர்களுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டதில்லை. இவை தமிழர்களுக்கு பயன்பட்டதுமில்லை. மாறாக தமிழர்களை அவர்களின் சொந்த நிலங்களில் இருந்து விரட்டி வெளியேற்றியுள்ளது. கல்லோயா திட்டம், மதுறு ஓயா திட்டம், யான்ஓயா திட்டம் என்று காலம் காலமாக தொடர்ந்த இனவிரோத நடவடிக்கைகள் தற்போது மீண்டும் கலாபோகஸ்வேவ, மாயாபுர, நாமல்புற போன்ற திட்டங்களாக வேகம்கொண்டு செயற்படுத்தப்படுகின்றன.

மகாவலி அபிவிருத்தி, வனப்பாதுகாப்பு, பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயம், இயற்கைஒதுக்கிடம் மற்றும் கடலும் கடல்சார்பாதுகாப்பு பிரதேசங்கள் என்கின்ற பெயர்களில் தமிழர்களின் வாழ்விடங்கள் அவற்றின் உரிமையாளரின் அனுமதிகளின்றி கபளீகரம் செய்யப்படுகின்றன.





குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அண்மைக்கால செயற்பாடுகளாக:

2006 விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மன்னார் நகரையும் தாண்டி எடுக்கப்பட்ட 120,000 ஏக்கருக்கு மேற்பட்ட இயற்கை பாதுகாப்புத் திட்டம்.

3 மீற்றருக்கு உயரமான மரங்களை கொண்ட வனப்பாதுகாப்பு அறிவித்தல்.

சுண்டிக்குளம், யாழ் கடலேரி, இரணைதீவு, ஆனையிறவு, குஞ்சுபரந்தன் பிரதேசங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு வலயம்.

மடு இயற்கை பாதுகாப்புப் பிரதேசத்தில் இராணுவ முகாமும் அதன் செயற்பாடுகளும்.

அரச அதிபருக்கும், மாகாண அதிகாரிகளுக்கும் தெரியாமல் மத்திய அதிகாரிகளும் நிறுவனங்களும் செயற்படுதல்.

இவற்றைச் செயற்படுத்துவதூடாக, வடமாகாணவிவசாயஅபிவிருத்திகளுக்கு செயற் படுத்தும் முட்டுக்கட்டை கள் போன்றன அறியக்கூடியதாக உள்ளன.

ஆற்றுநீரை விவசாய எழுச்சிக்கு பயன்படுத்துவதற்கோ, வளங்களை பாதுகாப்பதற்கோ அன்றி விலங்குகளுக்கோ பறவைகளுக்கோ வாழ்விடங்களை உருவாக்கிக் கொள்வதற்குத் தமிழ் மக்கள், எதிரான உணர்வுகளை கொண்டவர்கள் அல்லர். நீரையும், நிலத்தையும், இயற்கையையும், விலங் குகள் மற்றும் பறவைகளையும் நேசித்து வாழ்ந்த, வாழ்கின்ற இன மக்கள் நாங்கள்.

நீரைக்கொண்டு வாருங்கள், அதை எமக்கு தாருங்கள், வளங்களை உருவாக்குவோம். அதற்காக எமது வாழ்விடங்களை அழிக்க வேண்டிய தில்லை. பறவைகளைப் பாதுகாப்போம். அதற்காக மனிதர்களை விலங்குகள் போன்று விரட்டிகலைக்கவேண்டியதில்லை.

வடக்கு–கிழக்கு மாகாணங்களின் பரப்பு வீச்சில் வனவளமும் நீர்வளமும் யுத்தத்தின் காரணமாக பாவிக்காமல் நாட்டின் சேமிப்பாகவே உள்ளதையும் நாம் அறிவோம். அவை இயற்கை எம் அனைவருக்கும்அளித்தகொடையாகும். அதன் பயன்பாடுகள் அனைவருக்கும் பொதுவானவை. சமனானவை. நிச்சயமாக நிலத்தின்மேல் உரிமைகொண்ட பூர்வீக மக்களுக்கு அவை உரித்தா னவை.

இந்த நிலங்களை இன, மத, பேதமின்றி விவசாயிகள் பயன்படுத்துவது வரவேற்கக்கூடிய ஒரு செயற்பாடு ஆகும். ஆனால், திட்டமிட்ட இன வேறு பாடுபாடுகள் மற்றும் விரோத செயற்பாடு களுக்கு பயன்படுத்துவதும், இன்னோர் இனத்தின் வாழ்வியலை திட்டமிட்ட வகையில் அழிக்கவும் அரச வளங்களையும் பயன்படுத்தி இனப்பரம்பலை மாற்றியமைத்து வளங்களைச் சூறையாடுவதும் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

இலங்கைத் தீவில் இனங்களுக்கிடையிலான விரிசலுக்கும், இரு தரப்பினருக்கிடையிலான நீறு பூத்த நெருப்பாக விளங்கும் பகையுணர்வுக்கும் மகாவலி அபிவிருத்தி திட்டங்களும், சரணாலயத் திட்டங்களும், பாரபட்சமான வனப்பாதுகாப்பு நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க அளவில் பங்களித்துள்ளதை அனைவரும் அறிவார்கள். இந்த நாட்டில் உண்மையான சமாதானதுக்காக ஏங்குபவர்களுக்கும், கடந்தகால தவறுகளுக்காக வருந்துபவர்களுக்கும் இவற்றைப் பற்றி நன்கு புரியும்.

சிங்கள அரசியல்வாதிகளாலும், புத்திஜீவிகளினாலும், தேசப்பற்றாளர்களினாலும் முன்மொழியப்பட்ட தேசிய நல்லிணக்கத்திற் கான பரிந்துரைகளில் கூட இவையெல்லாம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆனாலும் இன்றைய ஆட்சியாளர்களும் அரசு இயந்திரமும் எந்தவிதமான எதிர்கால அக்கறையுமின்றி, எதிர்கால சந்ததியினரின் வளமான முன்னேற்ற திட்டமிடல் எண்ணமும் இன்றி, தமது வழமையான பேரினவாத சிங்கள பௌத்த மயமாக்கலை பல் வேறு திட்டங்களின் பெயரில் தொடர்ந்து அரங்கேற்றி வருகின்றனர்.

தமிழர் தரப்பின் ஆரோக்கியமான இணக்க அரசியல் எண்ணங்களும் செயற்பாடுகளும் தொடர்ந்து உதாசீனப்படுத்தப்படுமானால் அல்லது பலவீனமா னதாக கருதப்படுமானால் அதன் விளைவு களையும் இந்த நாடு அனுபவிக்கும் காலமும் வெகு தொலைவில் இல்லை என்பதையும் வலியுறுத்தி கூறவிரும்புகின்றேன்.

நாட்டை சின்னாபின்னமாக்கிய கொடூரமான யுத்தம் உருவாக ஏதுவாயிருந்த மூலகாரணங்கள் மீண்டும் ஒரு சுற்றுவட்டத்தில் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுவதைக் கண்கூடாக காண்கின்றோம். அதன் பாதகமான செயல்களை நன்கு தெரிந்து வைத்துக்கொண்டுதான் இவை முன்னெடுக்கப்படுகின்றன என்பது தான் எமது நாட்டின் ஆட்சி முறைமையின் மிகப்பெரிய மன்னிக்கமுடியாத சோகமும் கேவலமுமாகும்.

நாங்கள் கேட்பதெல்லாம், சொல்லுவதெல்லாம் ஒன்றுதான். அதாவது சாதாரண சிங்கள மக்கள் நாட்டின் எந்த திசையிலும் நிலங்கள் வாங்கி குடியிருப்பதற்கு நாம் எதிரானவர்கள் அல்லர்.

ஆனால், அரசு திட்டமிட்ட வகையில் கபட நோக்குடன் தமிழர்களின் இருப்பை சீர்குலைக்கும் வகையில் செயற்படுத்தும், உருவாக்கும் குடியிருப்புத் திட்டங்களினை நாம் நிச்சயம் எதிர்ப்போம்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களின் வாழ்விடங்களுக்கு வந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக்களை கொள்ளையிட எக்காலத்திலும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. அதற்கானதேவையும் இல்லை.

தமிழராக, இலங்கையராக நாமும் வாழ்ந்து எல்லோரையும் வாழவைக்க வேண்டும் என்பதே எம்முடைய விருப்பம்.

இதனை அனுமதிப்பதா?, இல்லை எல்லா மக்களும் எல்லா இனமும் எல்லா மதங்களும் தொடர்ச்சியாக சீரழிவதற்கான ஏதுவான நிலைமைகளை உருவாக்குவதா என்பதை நல்லாட்சி எனும் மாயைக்குள் ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களும் அரசும் அரச இயந்திரமுமே தீர்மானிக்க வேண்டும்.– என்றுள்ளது.

---

# தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஒத்துழைக்கிறார்கள் என்பதன் அர்த்தம், எல்லாவற்றையும் செய்கிறார்கள் என்பது அல்ல. உணர்ச்சிவச தமிழர்களுக்குத் தெரியாத ராஜதந்திரத்தை, அவர்கள் மிகவும் திறமையாகச் செய்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை சபையை எமது உணர்ச்சி வச அரசியல்வாதிகள் உட்பட சில புலம் பெயர் வாழ் தமிழர் தவறாக புரிந்து கொண்டுள்ளார்கள். இதற்கான முக்கிய காரணம், கொழும்பின் பிரித்து ஆளும் படலம், புலம்பெயர் வாழ் தமிழரிடையே மிகவும் வலுவாக ஊடுருவியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையிடம் எதை எதிர்பார்க்கலாம், கேட்கலாம் என்பவற்றை நாம் ஐ.நா. விதிமுறைகள், நடைமுறைகள், சரித்திரங்களை ஆராய்வதன் மூலம்புரிந்துகொள்ளமுடியும். ஐ.நாவில் நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களைநாம் முன்வைத்துவிட்டு, ஐ.நாவை குறை கூறுவதில் எந்தப் பயனுமில்லை.

ஐ.நாவைப் பொறுத்தவரையில், எந்த நாடாக, இனமாக இருந்தாலென்ன, சில படி முறைகள் மூலமே நிலைமைகளை கையாளுகிறது. இதற்கு பல உதாரணங்கள் உண்டு. ஐ.நாவின் உதவியுடன் புதிய நாடுகளான எரித்திரியா, கிழக்கு திமோர், தென் சூடான் ஆகியவற்றின் படிமுறைகள், விதிமுறைகளை நாம் படிக்க வேண்டும். நாம் தமிழர்கள் என்ற கார ணத்திற்காக ஐ.நா. சபை ஓர் புதிய வழி முறை களை கையாள வேண்டு மென எதிர்பார்ப்பது மடைமைத்தனம்.

**ஆருடம்**

இந்த அடிப்படையில், மார்ச் 2019ஆம் ஆண்டு நடக்கக் கூடிய விடயங்களை எனது அனுபவத்தில் இங்கு ஆருடம் கூற விரும்புகிறேன். இவை எனது தனிப்பட்ட விருப்பம் அல்ல. ஆனால் ஐ.நா.மனித உரிமை சபையை பொறுத்த வரையில் இவை சாத்தியமாக கணிக்கப்படுபவை.

ஆருடம் ஒன்று: இன்னும் ஒரு வருடகாலம், அதாவது மார்ச் 2020ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு நேர அட்டவணையுடன் கால அவகாசம் கொடுக்கப்படலாம். இது ஒரு நல்ல செய்தி அல்ல. இலங்கை மிகவும் இலகுவாக இதை ஏற்றுக் கொள்வதற்குக் காரணங்கள் பல உள்ளன. ஆருடம் இரண்டு: சில வேளைகளில், சிறிலங்காவிற்கான ஓர் ஐ.நா. நிபுணர் நியமிக்கப்படலாம்.

இதை ஆங்கிலத்தில் Country Rapporteur என்பார்கள் (நாட்டிற்கான நிபுணர்). இப்படியாக ஒருவர் நியமிக்கப்பட்டால், இது சிறிலங்காவிற்கு மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இதற்கு பல நாடுகள் உதாரணமாகவுள்ளன.


இவை தவிர்ந்து ஒன்றும் நடைபெறவில்லையானால், இலங்கை ஐ.நா. மனித உரிமை சபையிலிருந்து மட்டுமல்ல, ஐ.நாவின் பிடியிலிருந்து முற்று முழுதாக தப்பித்துக் கொள்ளும். இங்குதான் உணர்ச்சி வச அரசியல்வாதிகளும், அவர்களால் மூளை சலவை செய்யப்பட்ட புலம் பெயர் தேசத்து உணர்வாளர்களும் மிக அவதானமாக இருக்கவேண்டும்.

இதேவேளை மனதிற் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் – மனித உரிமை சபைக்கும், ஒரு நாட்டின் அகதி அந்தஸ்து கோருவதற் கும் எந்த வித சம்பந்தமுமில்லை என்பதை, அகதிகளிடம் பணம் சம்பாதிக்கும் பேர் வழிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர், தாம் ஏதோ அகதிகளுக்காக மனித உரிமை சபையில் செய்கிறோமென நடித்து, ஒரு பக்கத்தில் அப் பாவி அகதிகளிடம் பணம் பறிப்பதுடன், மறைமுகமாக இலங்கை அரசின் வேலை திட்டங்களுக்குத் துணை போகிறார்கள். அகதிகளுக்காக எனக் கூறி செய்யப்படும் வேலைத்திட்டம், ஐ.நா. மனித உரிமை சபையில், அங்கத்துவ நாடுகள் தமிழ் மக்கள் மீது பகைமை கொள்ள வைக்கும் என்பதே உண்மை. ★

## வினாத்தாள் 26 பகுதி I இன் தொடர்ச்சி...

18)பின்வரும் நெய்யரியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்குச் சமன்




1.4

2.10

3. 8

19)உருவிலுள்ள முக்கோணியின் சுற்றளவு 10 m ஆகும். பக்கம் AB யின் நீளம் 3 m 80 cmஉம் ஆகும். பக்கம் AC யின் நீளம் யாது?

1.60
2.80
3.120




B3m 80cmC

20) குகனிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூ.23 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கையாது?

1.3
2.4
3.6

21) ஓர் இலக்கத்தை நினைத்துக் கொள்க

- அதனை இரு மடங்காக்குக
- அதிலிருந்து இரண்டைக் கழிக்குக
- இப்போது மூன்றினால் பெருக்குக
- அதனைஆறினால் வகுக்குக
- அதனுடன் இரண்டைக் கூட்டுக

கிடைக்கும் விடை நீர் முதலில் சிந்தித்த இலக்கத்திற்கு
1.சமம்
2.ஒன்றினால் கூடியது
3.ஒன்றினால் குறைந்தது






# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
வினாத்தாள் **26**

பகுதி - I

- எல்லா வினாக்களுக்கும் சரியான விடையின் கீழ் கோடிடுக


1 ஆம், 2 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட சொற்கூட்டத்திற்கு ஒத்தசொற்கூட்டத்தைத் தெரிவுசெய்க

1) அன்னை, ஆடவர், இலை
1.வடிவு, அழகு, வனப்பு
2.இரும்பு, கரும்பு, துரும்பு
3.கன்னம், கானகம், கிண்ணம்


2) பாட்டன், பிதா, தனயன்
1.பாட்டி, மாதா, மகள்
2.பாடகன், பாடகி, நடிகன்
3.அப்பா, அம்மா, குழந்தை

- முதலில் தரப்பட்டுள்ள உருவுடன் பொருந்தாத உருவைத் தெரிவுசெய்க

3)




4)




- முதலில் தரப்பட்டுள்ள உருவுடன் நெருங்கிய தொடர்புள்ள உருவைத் தெரிவுசெய்க

5)



6)



1 2 3

- பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிவுசெய்க

7) பார்த்தல் : கண் சுவைத்தல் : ..............................................
1.மூக்கு
2.நாக்கு
3.காது

8) நீளம் : பாய்தல தட்டு : ............................................................
1.ஓடுதல்
2.பாய்தல்
3.எறிதல்

9) பாதையில் பாம்பை ................................... தவளை பயத்தினால் ................................
1.சந்தித்த,நடுங்கியது
2.கண்ட,ஓடியது
3.வேட்டையாடிய,விரட்டினான்

10)தோட்டத்தில் வேலைசெய்து ............................... கூலியாட்கள்,மரநிழலில் ...............................
1.களைப்புற்ற,ஓய்வெடுத்தனர்
2.களைபிடுங்கிய,உணவுஉண்டனர்
3.மகிழ்ச்சியடைந்த,பாட்டுப்பாடினர்

11)சாகித்தியன் தனது 10 ஆவது பிறந்ததினத்தை இரு வருடங்களின் முன்னர் கொண்டாடினான் அப்போது துமியின் வயது 5 ஆகும். சாகித்தியன், ரவி ஆகியோரின் வயது பற்றிய சரியான கூற்று எது?
1.இன்று துமியின வயது, சாகித்தியனின் வயதைவிட 6 வயதுகுறைவாகும்..
2.இன்னும் 2 வருடங்களின் பின் சாகித்தியனின் வயது,துமியின் வயத்தின் இருமடங்காகும்
3.இன்னும் இரு வருடங்களின் பின்னர் ரவியின் வயது 9 ஆகும்

12)சரியானவிடையைத் தரும் கோவையைத் தெரிவுசெய்க
1.$12 \times 3 - 6 = 30$
2.$44 + 44 \cdot 8 = 40$
3.$6 \times 8 + 3 = 50$





13)சரியான கோவையைத் தெரிவுசெய்க
1. $222 + 333 + 444 - 222 = 777$
2. $222 + 333 + 444 + 2 = 777$
3. $222 + 333 + 444 + 33 = 777$

- பின்வரும் தொடர்பை அவதானித்து 19, 20 ஆம் வினாக்களுக்கு விடைதருக

```
 A B C
 E A C
------
 7 8 E      B – E + 1
------
```

14)Aயின் பெறுமதியாது?
1.5
2.12
3.7

15)$A \times C \times E$ இன் பெறுமதியாது?
1. 16
2. 12
3. 10

16)T,O,R,S,B , V ஆகிய எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடிக்குக் காட்டினால் அதே அமைப்பில் மாற்றமின்றித் தெரியும் எழுத்துக்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க .
1. BRV
2. TOV
3. RBT

17) இன்று புதன்கிழமை நாளைமறுநாள் 15 ஆம் திகதி சென்ற வெள்ளிக்கிழமை சுதன் தனது பிறந்ததினம் நேற்று என்று கூறினான். சுதன் எந்தத் திகதியில் பிறந்தான்
1. 11 ஆம் திகதி
2. 12 ஆம் திகதி
3. 10 ஆம் திகதி

# மூளை சத்திரசிகிச்சையின் போது புல்லாங்குழல் வாசித்த பெண்

அமெரிக்காவில் டெக்காஸ் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் மூளை சத்திரசிகிச்சை நடந்த போது புல்லாங்குழல் வாசித்த சம்பவம் அனைவரை யும் ஆச்சரியப்பட வைத்துள்ளது

அமெரிக்காவில் டெக்காஸ் பகுதியைச் சேர்ந்த பெண் அன்னா ஹென்றி. 63 வயதான இவர் புல்லாங் குழல் இசைக்கலைஞர். இவரது மூளையில் கட்டி இருந்தது. அதனால் அவதிப்பட்ட அவர் வைத்தி யரை அணுகினார்.

பரிசோதித்த வைத்தியர் சத்திரசிகிச்சை செய்து



கட்டியை அகற்றினால் குணமடைய வாய்ப்பு உள்ளது எனக் கூறினார். எனவே அவர் ஹுஸ்டனில் உள்ள ஹெர்மான்-எடக்சாஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு மூளையில் சத்திரசிகிச்சை நடந்தது. அப்போது அன்னா ஹென்றி படுக்கையில் இருந்தபடி புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தார்.

அறுவைச்சிகிச்சையின்போது, மூளையை ஆழ்ந்த தியான நிலைக்கு கொண்டு செல்வது ஒருவகை சிகிச்சை என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆப்கனில் பாடசாலை மீது குண்டு வீச்சு; 150 பேர் சாவு



ஆப்கானிஸ்தானில் தலிபான்களைக் குறிவைத்து இராணுவம் நடத்திய குண்டுவீச்சில் பொதுமக்கள் 150 பேர் உயிரிழந்துள்ளனர் என தலிபான் பயங்கர வாதிகளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் குண்டூஷ் மாகாணத்தில் தஷ்ட்-இ-ஆர்சி என்ற மாவட்டம் தலிபான் பயங்கர வாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே அதை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர இராணுவம் அதிரடித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் தலிபான் அமைப்பின் உறுப்பினர்கள் குவெட்டாவில் இருந்து தஷ்ட்-இ-ஆர்சி பகுதியைப் பார்வையிட சென்றனர். எனவே அங்கு தலிபான் பயங்கரவாதிகள் அனைவரும் ஒரு மசூதியில் ஒன்றாகக் கூடினர்.

அவர்களைக் குறிவைத்து இராணுவக் ஹெலிக் கொப்டர்கள் குண்டுவீசித் தாக்கின. அதில் குறி தவறி மசூதியையொட்டியுள்ள பாடசாலை மீது குண்டுகள் விழுந்தன.

அதனால் பாடசாலைக் கட்டடமும், அதை ஒட்டி யுள்ள மசூதியின் ஒரு பகுதியும் இடிந்தன. குண்டு வீச்சு நடந்தபோது பாடசாலையில் மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடந்தது. அதில் மாணவர்கள் மட்டுமின்றி பெற்றோரும் கலந்து கொண்டனர். அதனால் இடிபாடுகளில் சிக்கி 150 பேர் பலியா கினர். இவர்களில் தீவிரவாதிகளும் அடங்குவர்.

இந்தத் தகவலை தலிபான் பயங்கரவாதிகளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். ஆனால் 25 தீவிரவாதிகள் மட்டுமே பலியாகினர் என அரசு தெரிவித்துள்ளது. காயம் அடைந்த 50 பேர் குண் டூஷ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஹபீஸ் சயீத்தின் கட்சி பயங்கரவாத அமைப்பு



அமெ. அறிவிப்பு

வொஷிங்டன், ஏப். 04

மும்பை தாஜ் ஹோட்டல் தாக்குதல் தீவிரவாதி ஹபீஸ் சயீத் தின் மில்லி முஸ்லிம் லீக் கட்சியைப் பயங் கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித் துள்ளது.

மும்பை தாஜ் ஹோட்டல் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் ஹபீஸ் சயீத். இந்திய அரசால் தேடப்படும் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ள ஹபீஸ் பாகிஸ் தானில் தலைமறைவாகி இருக்கிறார்.

இந்த நிலையில், ஹபீஸ் சயீத்தின் மில்லி முஸ்லிம் லீக் கட்சியை வெளிநாட்டு பயங்கர வாத அமைப்பு பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது.

முன்னதாக, ஹபீஸ் சயீத்தை சர்வதேச தீவிரவாதியாக அமெரிக்கா அறிவித்திருந் தமை என்பது குறிப்பிடத்தக்கது.

# எகிப்தின் அதிபராக அப்துல் சிசி தேர்வு



எகிப்து நாட்டின் நடைபெற்ற அதிபர் தேர்தலில் சுமார் 97 வீத வாக்குகள் பெற்ற அப்துல் சிசி மீண்டும் அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

எகிப்து நாட்டில் அதிபர் தேர்தல் நடை பெற்றது. இதற்கான வாக்குப் பதிவு கடந்த திங்கட்கிழமை தொடங்கி 3 நாள்கள் இடம்பெற்றன. இந்தத் தேர்த லில் அதிபர் அப்துல் சிசி மீண்டும் போட்டி யிட்டார். அவரை எதிர்த்து மவுசா முஸ் தபா போட்டியிட்டார்.

முதல் 2 நாள்கள் நடந்த தேர்தலில் வாக்குப் பதிவு மிகக் குறைவாக இருந் தது. இதனால் வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று தேர்தல் துறை அறிவித்தது. ஆனாலும், வாக்குப் பதிவு அதிகமாக நடக்கவில்லை. வாக்குப் பதிவு குறைவாக இருந்தால் தற்போ தைய அதிபருக்கு தோல்வி ஏற்படலாம் எனக் கருதினார்கள்.

இந்த நிலையில், இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட் டன. முடிவில் தற்போதைய அதிபர் அப் துல் சிசி பதிவான வாக்குகளில் சுமார் 97 வீத வாக்குகள் பெற்றார். இதன்மூலம் அவர் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி மரணம்



தென்னாபிரிக்காவை சேர்ந்த இனவெறிக்கு எதிரான பிரசாரகரான 81 வயதாகும் வின்னி மண்டேலா இறந்து விட்டார் என அவரது தனி உதவியாளர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின அதிபரான நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி இவர்.

கறுப்பினத்தவர்களின் உரிமைகளுக்காக மூன்று தசாப்தகாலங்களுக்கு மேலாகப் போராடிய நெல்சன் மண்டேலா, தனது 27 வருட சிறைவாசத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்தபோது அவருடன் வின்னி மண்டேலா கைகோத்து நடந்த புகைப்படம் அப்போது இனவெறிக்கு எதிரான போராட்டத்தின் சின்னமாகத் திகழ்ந்தது.

எனினும், அதன்பிறகு அவரது புகழ் சட்டபூர்வ மாகவும், அரசியல்ரீதியாகவும் மங்கத் தொடங்கியது.

இந்த நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக ஜோகனஸ்பார்க் நகரில் உள்ள நெட்கேர் மில்பார்க் மருத்துவமனையில் வின்னி என்றழைக்கப்படும் நோம் ஸாமோ வின்னிபிரெட் மடிக்கிசேலா மண்டேலா தனது 81ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார்.

# 1,372 ரோபோக்கள் ஆடிய ஆனந்த நடனம்



புதிய கின்னஸ் சாதனை

இத்தாலியில் ஆயிரத்து 372 ரோபோக் கள் ஒரே இடத்தில் நடன மாடி புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளன.

இத்தாலியில் ரோபோக்கள் நடனமாடும் நிகழ்ச்சி நடை பெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஆயிரத்து 372 அல்பா 1 எஸ் ரக ரோபோக்கள் நடனமாடின. இது புதிய உலக சாதனை யாகப் பதிவு செய்யப்பட்டது.

இதற்கு முன் சீனாவில் ஆயிரத்து 69 ரோபோக்கள் நடன மாடியமை சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையை இத்தாலி முறியடித்துள்ளது. இது பற்றிய வீடியோ இணையத் தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.

40 சென்ரி மீற்றர் உயரம் உள்ள இந்த ரோபோக்கள் அலுமினியத்தால் செய்யப்பட்டு பிளாஸ்டிக்கால் மூடப்பட் டுள்ளன.

# 128 அமெ. பொருள்களுக்கு சீனா கூடுதல் வரி விதிப்பு

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பழங்கள் மற்றும் அது தொடர்பான 120 பொருள் களின் மீது 15 வீத கூடுதல் வரியும், பன்றி இறைச்சி மற்றும் அது தொடர்பான 8 பொருள்களுக்கு 25 வீத கூடுதல் வரியும் விதிக் கப்பட்டுள்ளது.

தனது நாட்டின் அறிவு சார் சொத்துகளைத் திட்ட மிட்டு திருடி வருகின்றது எனசீனா மீது அமெரிக்கா குற்றம் சாட்டியது. ஆனால் இதை சீனா மறுத்தது. எனி னும் இதை ஏற்காத அமெ ரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சீனாவில் இருந்து இறக்கு மதி செய்யப்படும் ஸ்டீல் மற்றும் அலுமினியத்தின் மீது 15 வீதம் முதல் 25 வீதம் வரை கூடுதல் வரியை விதித்தார். மேலும் சீனாவின் முதலீடுகளுக் குக் கடினமாக கட்டுப்பாடு களையும் அமெரிக்கா விதித்தது.

இதனால் அமெரிக்கா வுக்கு, ஏற்றுமதி செய்யும் 6 ஆயிரம் கோடி அமெ ரிக்க டொலர்கள் மதிப்பி லான பொருள்களுக்கு கணிசமான வரியை செலுத்தவேண்டிய கட்டா யம் சீனாவுக்கு உருவா னது. இதற்கு பதிலடி கொடுக்க சீனாவும் முடிவு செய்தது. இதனையடுத்து இந்த வரி விதிப்பு உடனடி யாக அமுலுக்குக் கொண் டுவரப்பட்டது.

# வன்கொடுமை சட்டம் தளர்வு: கலவரங்களில் 7 பேர் சாவு

புதுடில்லி,ஏப்.04

எஸ்.சி எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை தளர்த்தும் வகையில் உச்சநீதிமன்ற உத்தரவை எதிர்த்து நாடு முழுவதும் நேற்று நடைபெற்ற போராட்டங்களில் ம.பி, உ.பி, ராஜஸ்தான் மாநிலங்களில் 7 பேர் உயிரிழந்தனர்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் சட்டமாக இருக்கும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைத் தளர்த்தும் வகையில் உச்சநீதிமன்றம் சில திருத்தங்கள் செய்து தீர்ப்பு வழங்கியது. இதற்கு எதிராக நாடு முழுவதும் தலித் அமைப்புகள் நேற்றுப் போராட்டம் நடத்தின. வட மாநிலங்களில் நடந்த போராட்டங்கள் வன்முறையாக மாறின.





இந்த வன்முறையில் 7 பேர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், போராட்டக்காரர்கள் தாக்கியமையால் 60 இற்கும் மேற்பட்ட பொலிஸார் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் வாகனங்கள் தீக்கிரை ஆக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## போதையில் 3 மாதக் குழந்தையை அடித்துக் கொன்ற கொடூர தாய்

கவுகாத்தி,ஏப்.04

அசாமில் மூன்று மாதக் கைக் குழந்தை அழுது கொண்டிருந்த போது குடிபோதையில் தாய் அடித்து கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அசாம் மாநிலம் நாகோம் மாவட்டம் பொற்கொலா என்ற இடத்தைச் சேர்ந்தவர் ருப்ஜோதி. இவரது கணவர் கூலித் தொழிலாளி. இந்தத் தம்பதிக்கு ஏற்கனவே 2 வயது மகள் இருக்கிறார். 3 மாதத்திற்கு முன்பு மேலும் ஒரு பெண் குழந்தை பிறந்தது.

ருப்ஜோதிக்கு குடிப்பழக்கம் உண்டு. கடந்த 31 ஆம் திகதி போதையில் இருந்தார். அப்போது அவரது 3 மாதக் குழந்தை அழுது கொண்டே இருந்தது. குழந்தையை சமாதானப்படுத்த முயற்சித்தார். ஆனால், முடியவில்லை. தொடர்ந்து அழுதது.

இதனால் எரிச்சலடைந்த ருப்ஜோதி குழந்தையைச் சரமாரியாக அடித்தார். இதில் குழந்தை இறந்து விட்டது. இதை மறைப்பதற்காக அந்தக் குழந்தையின் பிணத்தை அருகிலுள்ள குட்டையில் வீசிவிட்டார்.

பின்னர் வீட்டில் இருந்த குழந்தையைக் காணவில்லை என நாடகமாடினார். இதுபற்றி பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டது. பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள்.

இந்த நிலையில் குட்டையில் வீசப்பட்ட குழந்தையின் பிணம் மிதந்தது. பொலிஸார் பிணத்தைக் கைப்பற்றி விசாரணை நடத்தினார்கள். குழந்தையின் உடலில் காயங்கள் இருந்தன.

எனவே, தாயார் மீது பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவரிடம் விசாரித்தபோது நான் தான் கொலை செய்தேன் என்று ஒத்துக்கொண்டார். அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## காவிரி மேலாண்மை சபை விவகாரம்:

# தமிழகத்தில் அ.தி.மு.கவினர் உண்ணாவிரதம்; முதல்வரும் துணை முதல்வரும் பங்கேற்பு



சென்னை,ஏப்.04

காவிரி மேலாண்மை சபை அமைக்காத மத்திய அரசைக் கண்டித்து அ.தி.மு.க. சார்பில் நேற்றுத் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. சென்னையில் நடைபெறும் போராட்டத்தில் முதல்வர் எடப்பாடி மற்றும் துணை முதல்வர் பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் உள்ள ஸ்கீம் என்ற வார்த்தைக்கு விளக்கம் கேட்டு உச்ச நீதிமன்றத்தை நாடி உள்ளது. எனவே, தமிழக அரசு சார்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது.

இதற்கிடையே, காவிரிமேலாண்மை சபை அமைக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசைக் கண்டித்தும், உடனடியாக காவிரி மேலாண்மை சபை அமைக்க வலியுறுத்தியும் அ.தி.மு.க. சார்பில் ஏப்ரல் 2 ஆம் திகதி தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று கட்சித் தலைமை அறிவித்தது. இதற்காக மாவட்ட வாரியாக நிர்வாகிகளும் அறிவிக்கப்பட்டனர்.

அதன்படி, அ.தி.மு.க. சார்பில் நேற்றுத் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியது. சென்னையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் பங்கேற்றனர். அவர்களுடன் அமைச்சர் ஜெயக்குமார், முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா, கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இதேபோல் அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்தப் பகுதி நிர்வாகிகள் தலைமையில் போராட்டங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ப)

## காவிரி விவகாரத்தில் அ.தி.மு.க. அழுத்தம் கூடக் கொடுக்கவில்லை

### ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை,ஏப்.04

காவிரி மேலாண்மை சபை அமைப்பது தொடர்பாக மாநில அரசு, மத்திய அரசுக்கு துளியளவு அழுத்தம் கூடக் கொடுக்கவில்லை என மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

காவிரி மேலாண்மை சபை அமைக்காத மத்திய அரசை கண்டித்து தி.மு.க.வினர் தொடர் மறியலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் நிருபர்களிடம் மு.க.ஸ்டாலின் கூறியவை வருமாறு:-

காவிரி மேலாண்மை சபை அமைப்பது தொடர்பாக மாநில அரசு, மத்திய அரசுக்கு துளியளவு அழுத்தம் கூட கொடுக்கவில்லை. அவர்கள் எதையும் செய்யாதமையால் தான் இன்று எல்லோரும் களத்தில் இறங்கிப் போராடுகிறோம்.

ஆளும் அ.தி.மு.க. அரசு பதவியை காப்பாற்றிக் கொள்வதற்காக அடிமை அரசாக செயற்படுகிறது. மத்திய அரசின் கால்களில் அடிமையாக விழுந்து கிடக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

## வளர்ப்பு மகனை வெள்ளையாக்க கருங்கல் கொண்டு தேய்த்த தாய்

மத்தியப்பிரதேசத்தில் 5 வயது வளர்ப்பு மகனை வெள்ளையாக்கிட அக்குழந்தையின் வளர்ப்புத்தாய், கருங்கல் கொண்டு தேய்த்த அதிர்ச்சிச் சம்பவ நடந்துள்ளது.

மத்தியப் பிரதேசம் மாநிலம் போபால் நகரைச் சேர்ந்தவர் சுதா திவாரி. இவர் திருமணமாகிப் பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாமல் இருந்துள்ளார். இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் குழந்தை ஒன்றைத் தத்தெடுத்துள்ளார். அந்தக் குழந்தை கறுப்பாக உள்ளான் என அக்கம் பக்கத்தினர் கூறியுள்ளனர்.

இதனால் அதிருப்தி அடைந்த சுதா அந்தக் குழந்தையை வெள்ளையாக்க எண்ணி கருங்கல்லைக் கொண்டு தேய்க்க முடிவு செய்துள்ளார். சுதாவின் உறவினர் ஒருவர், சுதாவிடம் இப்படியெல்லாம் செய்ய வேண்டாம் என அறிவுரை கூறியிருக்கிறார். ஆனால் சுதா இதனைக் கேட்காமல் கருங்கல்லைக் கொண்டு குழந்தையின் உடலில் தேய்த்துள்ளார். இதனால் குழந்தையின் உடலில் காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சுதாவின் உறவினர், குழந்தைகள் மீட்புக் குழுவினரிடம் முறைப்பாடு அளித்தார். சம்பவ இடத்துக்கு விரைந்த குழந்தைகள் மீட்புக் குழுவினர், காயமடைந்த குழந்தையை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். மேலும் சுதா திவாரி மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# இராமர் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றும் பா.ஜ.க.

மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு இராமர் கோவில் கட்டித் தருகிறோம் எனக் கூறி ஆட்சியைக் கைப்பற்றி மக்களை ஏமாற்றிவிட்டது என விஷ்வ இந்து பரிஷத் தலைவர் பிரவின் தொகாடியா குற்றஞ்சாட்டியுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் மொராதாபாத்தில் விஷ்வ இந்து பரிஷத் அமைப்பு சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் அந்த அமைப்பின் தலைவர் பிரவின் தொகாடியா கலந்துகொண்டார்.



பிரவின் தொகாடியா

அப்போது தொண்டர்கள் மத்தியில் பேசிய அவர் பா.ஜ.க.வை கடுமையாக விமர்சித்தார்.

அந்தக் கூட்டத்தில் அவர் பேசியவை வருமாறு:-

மத்தியில் ஆளும் மோடி அரசும், உத்தரப்பிரதேச மாநிலத்தை ஆளும் யோகி அரசும் ராமர் கோவில் கட்டித் தருவதாக அளித்த வாக்குறுதியால் தான் ஆட்சியைக் கைப்பற்றின. ஆனால் இப்போது அதை நிறைவேற்றாமல் நீதிமன்ற உத்தரவுக்குக் காத்திருக்கிறோம் எனக் கதை சொல்கிறார்கள். இராமர் பெயரைச் சொல்லி பா.ஜ.க. மக்களை ஏமாற்றிவிட்டது என்று தெரிவித்துள்ளார்.



## ஜோகன்னஸ்பர்க் டெஸ்ட்:

# 48 வருட சோகத்துக்கு முடிவு கட்டிய தென்னாபிரிக்கா

ஜோகன்னஸ்பர்க் டெஸ்டின் 2 ஆவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியாவை 119 ஓட்டங்களில் சுருட்டி, 48 வருடங்கள் கழித்து சொந்த மண்ணில் தொடரைக் கைப்பற்றியுள்ளது தென்னாபிரிக்கா.

தென்னாபிரிக்கா – ஆஸ்திரேலியா இடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்று வந்தது. இதில் நாணயச்சுழற்சியில் வென்று தென்னாப்பிரிக்க அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய தென்னாபிரிக்கா, மார்கிராமின் (152) அபார சதத்தால் 488 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. கவாஜா (53 ஓட்டங்கள்), டிம் பெய்ன் (62 ஓட்டங்கள்), பேட் கம்மின்ஸ் (50ஓட்டங்கள்) ஆகியோரின் அரைச் சதங்களால் 221 ஓட்டங்கள் எடுத்து ஆஸி. பலோ – ஒன் ஆனது.

267 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற போதிலும் பலோ – ஒன் கொடுக்காமல் தென்னாபிரிக்கா 2 ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. டு பிளிசிஸ் (120 ஓட்டங்கள்), டீன் எல்கர் (81 ஓட்டங்கள்) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் தென்னாபிரிக்கா 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 344 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. இதனால் ஒட்டு மொத்தமாக 611 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

612 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் ஆஸ்திரேலியா 2 ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. ஆஸ்திரேலியா நேற்று முன்தினம் 4 ஆவது நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 88 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் தொடங்கியது. முதல் ஓவரை பிலாண்டர் வீசினார். தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ஆஸ்திரேலியா 119 ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் தென்னாபிரிக்கா 492 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட தொடரை தென்னாபிரிக்கா 3:1 எனக் கைப்பற்றியது. 1970 ஆம் ஆண்டுக்குப் பின் தென்னாபிரிக்கா சொந்த மண்ணில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது கிடையாது. இந்தத் தொடரை வென்று 48 வருட சோகத்துக்கு முடிவு கட்டியுள்ளது தென்னாபிரிக்கா.

## 2 ஆவது டெஸ்ட் சமநிலை:

# சோதியின் பொறுப்பான ஆட்டத்தால் தொடரைக் கைப்பற்றிய நியூஸிலாந்து

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து வீரர் சோதியின் சிறப்பான துடுப்பாட்டத்தால் போட்டி சமநிலையில் முடிந்தது. எனவே, தொடரைக் கைப்பற்றியுள்ளது நியூஸிலாந்து.

நியூஸிலாந்து – இங்கிலாந்து அணிகள் இடையிலான முதல் டெஸ்டில் நியூஸிலாந்து வெற்றிபெற்று இருந்தது. 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நடைபெற்றது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 307 ஓட்டங்களும், நியூஸிலாந்து 278 ஓட்டங்களும் சேர்த்தன. 29 ஓட்டங்கள் முன்னிலையில் ஆடிய இங்கிலாந்து 2 ஆவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 352 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. இதனால் நியூஸிலாந்து வெற்றிக்கு 382 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்த இலக்குடன் ஆடிய நியூஸிலாந்து நேற்றுமுன்தினம் 4 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் விக்கெட் இழப்பின்றி 42 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

நேற்று 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. வெற்றிக்கு மேலும் 340 ஓட்டங்கள் தேவை, கைவசம் 10 விக்கெட்டுகள் என்ற நிலையில் நியூஸிலாந்து தொடர்ந்து விளையாடியது.

ஆனால், இங்கிலாந்து வீரர்களின் அபாரமான பந்து வீச்சால் நியூஸிலாந்து விக்கெட்டுகளை இழந்து திணறியது. 219 ஓட்டங்களில் 7 விக்கெட்டுகளை இழந்தது. தொடக்க வீரர் லாதம் 83 ஓட்டங்களும், கிராண்ட்ஹோம் 45 ஓட்டங்களும் எடுத்தனர்.

முன்னணி வீரர்கள் வெளியேறிய நிலையில் சோதி மட்டும் நிலைத்து நின்று ஆடினார். அவரது விக்கெட்டை மட்டும் எப்படியாவது எடுத்துவிட வேண்டும் என்று இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் கடுமையாகப் போராடினர். ஆனால், அவர்களது முயற்சி பயன் அளிக்கவில்லை. 5 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் நியூஸிலாந்து அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 256 ஓட்டங்கள் சேர்த்தது. இதனால் போட்டி சமநிலையில் முடிந்தது. சோதி 168 பந்துகளைச் சந்தித்து 56 ஓட்டங்கள் எடுத்து கடை வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து அணித் தரப்பில் பிராட், மார்க்வுட், ஜேக் லிச் தலா 2 விக்கெட்டுகள் எடுத்தனர்.



முதல் போட்டியில் நியூஸிலாந்து வெற்றி பெற்றதால், தொடரை 1:0 என கைப்பற்றியது. கடைசிப் போட்டியின் ஆட்டநாயகனாக டிம் சவுத்தி தேர்வு செய்யப்பட்டார். தொடர் நாயகன் விருதை டிரென்ட் போல்ட் தட்டிச் சென்றார்.



## கராச்சி 2 ஆவது ரி - 20:

# மீண்டும் வெற்றியை தக்கவைத்த பாக்.

மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான இரண்டாவது ரி-20 போட்டியில் பாகிஸ்தான் அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுத் தொடரைக் கைப்பற்றியது.

பாகிஸ்தான் சென்றுள்ள மேற்கிந்தியத்தீவு அணி மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வருகிறது. கராச்சியில் உள்ள தேசிய கிரிக்கெட் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் ரி-20 போட்டியில் பாகிஸ்தான் அணி 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது. இந்த நிலையில், இரண்டாவது ரி-20 போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 205 ஓட்டங்களைக் குவித்தது. பாபர் அசாம் 97 ஓட்டங்களுடனும், மாலிக் 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து 206 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்தியத்தீவு களமிறங்கியது. இறுதியில் மேற்கிந்தியத்தீவு அணி 19.2 ஓவர்களில் 123 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன்மூலம் பாகிஸ்தான் அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

# என்னுடைய பட்டியலில் விராட் கோஹ்லி, டோனி



விளையாட இருக்கும் குல்தீப் யாதவ், தான் வீழ்த்த வேண்டிய முன்னணி வீரர்களின் பட்டியலை வைத்துள்ளார். இதில் விராட் கோஹ்லியும் டோனியும் அடங்குவார்கள் என்று கூறியுள்ளார்.

விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டும் என நான் வைத்துள்ள பட்டியலில் விராட் கோஹ்லியும் டோனியும் உள்ளனர் என குல்தீப் யாதவ் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக ரிஸ்ட் ஸ்பின்னர் குல்தீப் யாதவ் உள்ளார். இவர் ஐ.பி.எல். தொடரில் 2016 மற்றும் 2017 சீசன்களில் 15 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தரம்சாலாவில் நடைபெற்ற டெஸ்டில் அறிமுகமான குல்தீப் யாதவ் தனது சைனமேன் பந்து வீச்சால் ஆஸ்திரேலியாவை நிலைகுலையச் செய்தார். அதன் பின் அஸ்வின், ஜடேஜாவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு ஒருநாள் அணியில் சேர்க்கப்பட்டார். சிறப்பான பந்து வீச்சால் இந்திய அணியின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா அணிக்காக

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் கடற்படைக் கட்டளைத் தளபதி நேற்று வடக்கு மாகாண ஆளுநர் றெயினோல்ட் குரேயைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

முற்பகல் 10.30 மணியளவில் ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சிநேகபூர்வமான இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்துக்குள் கொண்டுவரப்படும் போதைப் பொருள்களைத் தடுப்பதற்குரிய செயற்பாடுகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்றுப் பிரதமர் ரணிலுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே நடந்த சந்திப்பின் போதே இந்த நிபந்தனை முன்வைக்கப்பட்டது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதமர் ரணிலைச் சந்தித்தனர்.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம், காணிகள் விடுவிப்பு, காணாமல் போனோர் விவகாரம் ஆகியன தொடர்பில் பிரதமர் ரணில் எழுத்தில் உறுதிமொழி வழங்க வேண்டும் எனக் கூட்டமைப்பினரால் கோரப்பட்டது.

கூட்டமைப்பின் இந்தக் கோரிக்கைக்குப் பிரதமர் ரணில் இணக்கம் தெரிவித்தார் என்று அறிய வந்தது. (ஐ)

## பிரேரணையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்றுச் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைச்சருமான ஹர்ஷ டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் அரசுக்கு எதிராகவே அரசில் உள்ளவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றைக் கொண்டுவந்ததாக வரலாற்றில் பதிவாகியிருக்கவில்லை.

எனினும் இலங்கையில் தான் ஆட்சியிலுள்ள அரசுக்கு எதிராகவே அரச தரப்பிலிருந்து ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் பாரிய மறுசீரமைப்பு ஒன்றை விரைவில் கொண்டுவருவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. – என்றார். (ஐ)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 6 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தெற்காசியாவின் ஸ்டாண்டிங் ரிப்போர்ட்டர் மற்றும் சர்வதேச வர்த்தகத்தைப் பிரதி நிதித்துவப் படுத்தும் நாடாளுமன்றக் குழுவினரே இன்று வருகை தரவுள்ளனர்.

இந்தக் குழுவினர், ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டம் தொடர்பான இலங்கையுடனான உடன்படிக்கையின் முதல் கட்டப் பெறுபேறுகளை மதிப்பீடு செய்வதற்காக இங்கு வருகை தருகின்றனர் எனக் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## கூட்டமைப்பு அரியணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கைப்பற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

சபையின்புதியதலைவரைத் தெரிவு செய்யும் பகிரங்க வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் போட்டியிட்ட ஓய்வுநிலை அதிபர் அரியரத்தினம் சார்ள்ஸ் அரியகுமார் வெற்றி பெற்றார்.

21 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறைப் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 8 உறுப்பினர்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 4 உறுப்பினர்களையும், ஈ.பி.டி.பி. 3 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 2 உறுப்பினர்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணி 2 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசியக் கட்சி ஓர்உறுப்பினரையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஓர் உறுப்பினரையும் கொண்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைக்கான தலைவர், உப தலைவர் தெரிவுகள் நேற்றுப் பிற்பகல் பிரதேச சபை மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தலைவர் போட்டிக்கு அரியரத்தினம் சார்ள்ஸ் அரியகுமார் பிரேரிக்கப்பட்டார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கிருஷ்ணபிள்ளை ஜெயபாலன் பிரேரிக்கப்பட்டார். இவ்விருவருக்கிடையில் பகிரங்க வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பிரேரிக்கப்பட்ட அரியகுமார் 13 வாக்குகளைப் (கூட்டமைப்பு 8 + ஈ.பி.டி.பி. 3 + ஐ.தே.க. 1 + பொதுஜன பெரமுன 1) பெற்றுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஜெயபாலன் 4 வாக்குகளை மட்டும் பெற்றார்.

தமிழர் விடுதலை கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அதைத் தொடர்ந்து இடம்பெற்ற உப தலைவர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பிரேரிக்கப்பட்ட பாலசிங்கம் தினேஷ் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ஐ–7)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிலைகள் மறுசீரமைக்கப்படும் என அந்தக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழுவிடம் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை இந்த உறுதிமொழியை வழங்கினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் சஜித் பிரேமதாஸவை அண்மையில் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விரைவில் கட்சியின் தலைமையை ஏற்கத் தயாராகுமாறு கேட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நாடாளுமன்றில் இன்று இரவு வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாகவே மறுசீரமைக்கப்படும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை நடந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அறிவித்துள்ளார். (ஐ)

## சம்பந்தனுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலேயே இந்தச் சந்திப்பில் இருவரும் பேசினர் எனக் கூறப்பட்டது.

நேற்றுக் காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடந்தது. இதன் இடையிலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் ஜனாதிபதியைச் சென்று சந்தித்தனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாலை வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதுவரை காலமும் பதவி வகித்த ஆ.நடராஜன் புதுடில்லிக்குப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற நிலையில், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவராக பாலசந்திரன் புதிதாக நியமிக்கப்பட்டார்.

இந்தச் சந்திப்பின்போது இந்திய அரசால் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் முன்னேற்றத்தை நோக்கிப்பயணிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக ஆளுநர் அலுவலகம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கட்சியின் நாடாளுமன்றக்குழு நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது. இதன் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகாவிடின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக சு.க. வாக்களிக்குமெனத் தீர்மானிக்கப்பட்டது.

சு.கவின் மேற்படி தீர்மானம் தொடர்பில் பிரதமருக்குக் கடிதமொன்றை அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான நிமல் சிறிபாலடி சில்வா நேற்று அனுப்பியுள்ளார். இதற்குப் பிரதமர் தரப்பு கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. நேற்றுக் காலை ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடியபோதே பிரதமர் அருப்தியை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து சு.கவுக்கும் ஐ.தே.கவின் உறுப்பினர்கள் சிலருக்கும் இடையில் நடைபெற்றுள்ள சந்திப்பில் பிரதமர் இராஜினாமா செய்ய வேண்டுமென சு.கவினர் வலியுறுத்தியுள்ளனர். இதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர் ஹரின் பெர்னான்டோ, பிரதமர் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை. ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் அனைவரும் பிரதமர் பதவியில் தொடர வேண்டுமென ஆதரவளித்துள்ளனர் என்று பதிலளித்துள்ளார்.

தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ள பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது இன்று நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கரவெட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வசமானது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தங்கவேலாயுதம் ஐங்கரன் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இதுவரை இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தலைவர் தெரிவுகளின்போது கூட்டமைப்புக்கு ஆதரவளித்த ஈ.பி.டி.பி. நேற்று சு.கவுக்கு ஆதரவை வழங்கியது.

31 உறுப்பினர்களை கொண்ட கரவெட்டிப் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 9 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி 7 உறுப்பினர்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 7 உறுப்பினர்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணி 3 உறுப்பினர்களையும், ஈ.பி.டி.பி. 3 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 2 உறுப்பினர்களையும் கொண்டுள்ளன.

கரவெட்டி பிரதேச சபையின் புதிய தலைவர் தெரிவுக்கான முதலாவது அமர்வு நேற்றுக் காலை பிரதேச சபை மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தங்கவேலாயுதம் ஐங்கரன் தலைவர் போட்டிக்குப் பிரேரிக்கப்பட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சதாசிவம் இராமநாதன் பிரேரிக்கப்பட்டார். இவ்விருவருக்கிடையில் பகிரங்க வாக்கெடுப்பு நடைபெற்றது.

பகிரங்க வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என 11 பேரும் இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என 10 பேரும் கோரினர்.

வாக்கெடுப்பு இரகசியமாகவே நடத்தப்படவேண்டும் என இராமநாதன் வலியுறுத்தினார். சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறு செய்யமுடியாது என ஆணையாளர் அந்தக் கோரிக்கையை நிராகரித்தார்.

அவ்வாறானால் சட்டத்தை நாடவுள்ளதாக இராமநாதன் குறிப்பிட்டபோது, அது உங்கள் உரிமை என ஆணையாளர் தெரிவித்து பகிரங்க வாக்கெடுப்பை நடத்தினார்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பிரேரிக்கப்பட்ட த.ஐங்கரன் 11 வாக்குகளைப் பெற்று தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஐ.தே.கவின் இரு உறுப்பினர்களும் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர். இவரை எதிர்த்துப்போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ச.இராமநாதன் 10 வாக்குகளைப் பெற்றார். இதன்போது ஈ.பி.டி.பியின் 3 உறுப்பினர்களும் சு.கவுக்கு ஆதரவளித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலை கூட்டணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அதைத்தொடர்ந்து இடம்பெற்ற உப தலைவர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பிரேரிக்கப்பட்ட கந்தர் பொன்னையா போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ஐ–7)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து, ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ஐ)

## பிரேரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) களிப்போமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்று முன்தினம் இரவு கூடியது. இந்தக் கூட்டத்தில் சு.கவின் 42 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதன் போதே அனைவரும் மேற்கண்டவாறு ஏகமானதாகத் தீர்மானித்துள்ளனர்.

என்றாலும், நேற்றுக்காலை மீண்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளனர். இதன் போது சு.கவின் நிலைப்பாட்டுக்குப் பிரதமர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் என அறிய முடிகிறது.

நேற்றைய தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸாநாயக்க, பிரதமர் உடனயாகப் பதவி விலக வேண்டும். நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற சு.கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்தத்தீர்மானத்தை அனைவரும் ஏகமானதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். பிரதமர் பதவிவிலகாவிடின் எதிரணியின் பிரேரணைக்கு ஆதரவாக அனைத்து சு.கவினரும் வாக்களிப்போம். – என்றார்.

இதேவேளை, இன்றைய தினமும் சு.கவின் உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க நாடாளுமன்றில் கூடவுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## சு.கவுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இருந்து விலகாவிட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதுஎனநேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சு.க.கூட்டத்தில்முடிவுஎடுக்கப்பட்டது.

ஆயினும், இந்த முடிவில் சு.க வில் உள்ளே 15 நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு உடன்பாடு இல்லை என அவர்கள் ஜனாதிபதியிடம் தெரியப்படுத்தியுள்ளனர்.

ஆயினும் ஏனையோர் பிரேரணையை ஆதரிப்பது என்பதில் உறுதியாக உள்ளனர். இதனால் ஜனாதிபதிக்குப்பெரும்தலையிடி ஏற்பட்டுள்ளது.

நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த சு.கவின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரேரணையை சு.க. ஆதரிக்கக்கூடாது என வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து இந்த விடயத்தில்சுதந்திரக்கட்சிஉறுப்பினர்கள்சுயமாகமுடிவுஎடுக்கமுடியும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆனாலும் பிரேரணையை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவை ஜனாதிபதியே எடுக்க வேண்டும் என சு.கவின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றிரவு அவரிடம் நேரில் வலியுறுத்தியிருந்தனர் எனத் தெரிய வந்தது.

ரணில் பிரதமர் பதவியை இழந்து அந்த இடத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ வருவதாயின் தங்களது அமைச்சுப் பதவி பறிபோகும் எனக் கருதும் சு.கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பதினைந்து பேரே ரணிலுக்கு எதிராக வாக்களிப்பதற்குப் பின்னடித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

# ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது மக்களின் ஆணைக்கு சு.க.மதிப்பளித்துச் செயற்படும்!

கொழும்பு, ஏப். 04

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்களின் ஆணைக்கு முழுமையாக மதிப்பளித்து செயற்படும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அமைச்சர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் சுசில் பிறேமஜயந்த, வைபவத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து அகற்றும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிரணியால் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



அமைச்சர் பிறேமஜயந்த தெரிவிப்பு

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை புதன்கிழமை (இன்று) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே வாக்கெடுப்புக்கும் விடப்படவுள்ளது.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வரும் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அமைச்சர் சுசில் பிறேமஜயந்த, சுதந்திரக் கட்சியினரான தாம், மக்களின் ஆணைக்கு துரோகம் இழைக்க மாட்டோம் என்று சூளுரைத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின்போது தற்போதைய அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் கடும் அதிருப்தியில் இருப்பதை மிகத் தெளிவாக காட்டுகிறது. இதனால், அவர்களின் முடிவுக்கு செவிசாய்க்க வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கிறோம்.

இதனாலேயே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை விலகுமாறு வலியுறுத்தப்படுகிறது. இந்த நிலைப்பாட்டிலே சுதந்திரக் கட்சியின் பெரும்பாலான அமைச்சர்கள் உட்பட உறுப்பினர்கள் இருக்கின்றர்.

இதற்கமைய நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது கட்சி என்ற அடிப்படையில் பொதுவான தீர்மானமொன்றை எடுத்து அதற்கமைய தாங்கள் செயற்படுவோம் என்றும் அமைச்சர் சுசில் குறிப்பிட்டார்.

## புதுவருடப் பஞ்சாங்கம் இன்று ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஏப். 04

புத்தாண்டுக்கான பஞ்சாங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இன்று முற்பகல் கையளிக்கப்படவுள்ளது.

அமைச்சர் எஸ்.பி.நாவின்ன உள்ளிட்ட பல பிரமுகர்கள் இந் நிகழ்வில் கலந்து கொள்வார்கள் என்று கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அனுஷா கோகுல தெரிவித்துள்ளார்.



வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, இம்மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.03 இற்கும், திருக் கணித பஞ்சாங்கத்தின்படி, காலை 8.13 இற்கும் புதுவருடம் பிறக்கிறது.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, இம்மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பின்னிரவு 2.50 முதல் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.50 வரை விஷு புண்ணிய காலமாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி, சனிக்கிழமை அதிகாலை 4.13 முதல் பகல் 12.13 வரையிலான காலப் பகுதி விஷு புண்ணிய காலத்துக்குரியதாகும். இதே வேளை, புத்தாண்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்கள் கையிருப்பில் காணப்படுவதாக உரிய அரச, தனியார் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குத் திரும்பும் மக்களின் நலன்கருதி எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் மேலதிக பஸ் சேவைகள் அமுல்படுத்தப்படவிருக்கின்றன. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வழங்கப்படவிருக்கிறது.

## கண்டியில் வன்முறை நடந்த பகுதிகளில் இராணுவத்தினர் சுத்திகரிப்பு பணியில்

கண்டியில் அண்மையில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவத்தினர் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தைச் சேர்ந்த 150 படைச்சிப்பாய்கள் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை இந்தச் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

11 ஆவது படைப் பிரிவின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் நிஷ்சங்க ரணவன தலைமையில் கண்டி மற்றும் குருநாகல் நகர பிரதேசத்தில் இந்த சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவின் பணிப்புரைக்கமைய முல்லைத்தீவுப் பாதுகாப்பு படைத் தளபதியால் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



கடந்த 28 ஆம் திகதி திகண, கேகாலை வீதி இரு பக்கங்களிலும் படையினர் குண்டசாலை பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

திகண, அக்குரன, கலஹா, கடுகஸ்தோட்ட, மெனிக்கின்ன, அம்பதென்ன, பூஜாபிட்டிய போன்ற பிரதேசங்களில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என இராணுவம் தெரிவித்துள்ளது.

## தேயிலை மலையிலிருந்து சிறுத்தைக் குட்டி மீட்பு!

கொழும்பு, ஏப். 04

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கவரவில பெரிய சோலங்கந்த தேயிலை மலையிலிருந்து சிறுத்தைக் குட்டி ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.



பிறந்துநான்கு அல்லது ஆறு நாள் நிரம்பிய கண்கள் கூட திறக்கப்படாத நிலையில் இந்த சிறுத்தைக் குட்டி உயிருடன் மீட்கப்பட்டுள்ளது என நல்ல தண்ணீர் வனஜீவி காரியாலயத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சோலங்கந்த தோட்ட தொழிலாளர்களே நேற்றுக்காலை தேயிலை மலையிலிருந்து சிறுத்தைக் குட்டியைக் கண்டுபிடித்துள்ளனர்.

தாய்ச் சிறுத்தையுடன், மேற்படி சிறுத்தைக் குட்டி தேயிலை மலையில் உலாவித்திரிந்துள்ளது. தொழிலாளர்களைக் கண்டவுடன் தாய்ச் சிறுத்தை குட்டியை விட்டுச் சென்றுள்ளது. இதனையடுத்து தொழிலாளர்கள் அநாதரவாக நின்ற சிறுத்தைக் குட்டியை மீட்டுள்ளனர்.





## இலங்கை சுற்றுலாப் பயணிகள் விகாரை அமைக்கும் பணியில்

வெளிநாட்டிலிருந்து இலங்கை வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் செயற்பாடு பலருக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

பண்டாரவளை, மஹாமேவ்னா பகுதியில் பௌத்த விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

விகாரையின் நிர்மாணப் பணிக்காகப் பல்வேறு தரப்பினர் பல வகைகளில் உதவி வருகின்றனர்.

இந்த நிலையில் விகாரையின் நிர்மாணப் பணியில் வெளிநாட்டவர்கள் சிலர் ஈடுபட்டுள்ளமை குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

இலங்கைக்கு சுற்றுலா வந்தவர்கள் விகாரை அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த வெளிநாட்டவர்கள் தங்கள் நாட்டில் விகாரை ஒன்றை நிர்மாணிப்பதற்குப் படும் கஷ்டத்தைப் போன்று இலங்கையிலும் செயற்படுவது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். நிர்மாண நடவடிக்கைக்குத் தேவையான சகல வேலைகளையும் சுற்றுலாப் பயணிகள் செய்து வருகின்றனர்.

அந்தப் பகுதியில் தமக்கான குடிலை அமைத்துத் தேவையான உணவை அவர்களே தயாரித்து சாப்பிடுகின்றனர்.

வெளிநாட்டவர்களின் சேவையைப் பார்க்கும் போது பாராட்டவே தோன்றுகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுலாப் பயணிகள் நிர்மாண நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புத் தொடரும்

கொழும்பு, ஏப் 04

உயர் கல்வி அமைச்சர் வழங்கிய உறுதிமொழிக்கு அமைவாக சுற்றறிக்கை வெளியிடப்படாததால் பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் தமது போராட்டத்தை முன்னடுக்க உள்ளனர் என அறிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது தொடர் போராட்டத்தைக் கைவிட்டு இன்று மீளவும் பணிக்குத் திரும்பத் திட்டமிட்டிருந்தனர். இந்த நிலையிலேயே நேற்று மாலை போராட்டத்தைத் தொடரப் போவதாக அவர்கள் தமது முடிவை மாற்றியுள்ளனர்.

உயர் கல்வி அமைச்சருடன் நேற்று முன் தினம் இடம்பெற்ற பேச்சுக்களில் வழங்கப்பட்ட உறுதிமொழியையடுத்து பணிப்புறக்கணிப்பைக் கைவிடுவதாக அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைந்த குழு தெரிவித்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழியர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணி புரியும் தற்காலிக மற்றும் சமயாசமய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் நாடு முழுவதும் பெப்ரவரி 28ஆம் திகதி முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

# கோட்டாபயவுடன் சீனாவில் மைத்திரியின் சகாக்கள் பேச்சு

கொழும்பு, ஏப்.04

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ அங்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முக்கிய ஆலோசகர்கள் சிலருடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சீனா சிறிசேனவுக்கு நெருக்கமான ஐவர் கொண்ட குழுவொன்றையும் கோத்தபாய ராஜபக்ஷவையும் தனித்தனியாக தனது நாட்டுக்கு அழைத்துள்ளது.

அதன் பின்னர் இவர்கள் சந்திப்பதற்குச் சீனா ஏற்பாடுகளை செய்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்துரலிய ரத்ன தேரர், அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க உட்பட ஐவர் கொண்ட குழுவைச் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் அவர்கள் இருவரும் சீனா செல்லவில்லை.

மார்ச் 28 ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட சிறிசேனவின் ஆலோசகர் சிரால் லக்திலக தலைமையிலான குழுவினர் அங்கு கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளனர்.

இரு தரப்பும் மேற்கொண்ட பேச்சுக்கள் தொடர்பான விவரங்கள் வெளியாகாதபோதிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் பொது எதிரணிக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# ஆதரவளிக்கும் தரப்போடு இணைந்து பயணியுங்கள்!

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கூட்டமைப்பிடம் பொது அமைப்புகள் கோரிக்கை




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 04

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான இன்றைய நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களில் எந்தத் தரப்பு ஆதரவாகச் செயற்படத் தயாராகவிருக்கின்றதோ அந்தத் தரப்போடு சேர வேண்டும் என வெகுஜன அமைப்புக்களின் கூட்டு கோரிக்கை விடுத்துள்ளது.**

நேற்று மாலை யாழ்.ஊடக அமையத்தில் ஒன்பது வெகுஜன அமைப்புகளினதும் முக்கிய பிரதிநிதிகளால் நடத்தப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பின்போதே இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இது தொடர்பாக அங்கு கருத்து தெரிவித்த விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் அ.யோதிலிங்கம் ஆகியோர் தெரிவித்தவை வருமாறு:

தமிழர் தரப்புக்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும். அரசியலில் நல்ல சந்தர்ப்பங்கள் அமைவது கடினமானது. ஆனால் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அதன் அமைவிட நிலைகளின் அடிப்படையில் சந்தர்ப்பங்கள் அதிகமாக கிடைக்கின்றன. இருந்தபோதிலும் அதனைத் தமிழர் சரியாக பயன் படுத்தாமையாலேயே பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

தற்போது பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில், தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கூடிய தரப்போடு பேச்சு நடத்தி அதில் இணக்கம் காணப்படுகின்ற அணிக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கவேண்டும்.

அந்த வகையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் எந்தவிதமான நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும், வட பகுதியை நோக்கிய மகாவலி திட்டம் குடியேற்றத் திட்டம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும், மாவட்ட அரச செயலகங்களின் அதிகாரங்கள் மீளவும் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், வன பரிபாலனத் தொல்பொருள் திணைக்களத்தின் தமிழர் பிரதேசங்கள் மீதான அத்துமீறல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், படையினரால் பறிக்கப்பட்ட காணிகள் மீள ஒப்படைக்கப்படவேண்டும், தமிழர் பிரதேசங்களில் தமிழர் தரப்பின் பங்களிப்புடன் மாத்திரம் பொருளாதார முதலீட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும், தமிழ் பிரதேசங்களில் சிங்கள மீனவர்களது ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், வவுனியா, மன்னார் அரச அதிபர்களாக தமிழர் நியமிக்கப்பட வேண்டும், கல்முனை தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவு உடனடியாக தரமுயர்த்தப்பட வேண்டும், சிவில் நிர்வாக விடயங்களில் இருந்து இராணுவம் உடனடியாக விலக வேண்டும் என்ற இணக்கப்பாட்டுக்கு அமையவே அந்த தரப்புக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்க வேண்டும் – என்றனர். (ஐ-7)




# நீதித்துறைத் திருத்தச் சட்டவரைவினை நிறைவேற்ற 2/3 பெரும்பான்மை தேவை

## உயர்நீதிமன்று வியாக்கியானம்

கொழும்பு, ஏப்.04

நிரந்தர நீதாய மேல்நீதிமன்றை (ட்ரயல் அட் பார்) அமைப்பதற்கான சட்ட வரைவுநாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்படுவது அவசியம் என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கி உள்ளது எனச் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

நிதி மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்துவதற்காக நிந்தர நீதாய மேல் நீதிமன்றங்களை (ட்ரயல் அட் பார்) அமைப்பதற்காக அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நீதித்துறை சிறப்பு ஏற்பாடுகளின் திருத்தச் சட்டவரைவுக்கு எதிராக மகிந்த ஆதரவு கூட்டு எதிரணி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தது.

இந்தத் திருத்தச் சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ள மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், நீதியரசர்கள் புவனேக அலுவிஹார, நளின் பெரேரா ஆகிய மூன்று நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரிக்கப்பட்டது. இந்த நிலையில் உயர் நீதிமன்றின் வியாக்கியானம் நாடாளுமன்றுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது.

அந்த மனு மீதான வியாக்கியானம் சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நீதித்துறைச் சட்டவரைவிலுள்ள சில விடயங்கள் அரசிமைப்புக்கு முரணானவை. அவை திருத்தப்படாவிடின் சட்டவரைவை நிறைவேற்ற நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பாண்மை அவசியம் என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது. (ஐ)

## நூல்கள் விற்பனைக்கு

### சேமமடு பதிப்பகம், பத்மம் பதிப்பகம்

2017 கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை (EPAB) அங்கீகரித்த சுமார் 180 நூல்கள் (40 சிறுவர் நூல்கள்) போதியளவு கையிருப்பில் உள்ளன. மொத்தமாகவும் சில்லறையாகவும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். இந்தியா தமிழ்மண் பதிப்பகத்தின் நூல்களும் கையிருப்பில் உள்ளன.

'சேமமடு புத்தகசாலை'
சேமமடு

Chemamadu Book Center, Publication
UG - 50, People's Park, Colombo - 11
Mob - 0777 - 345666, 071 - 2726778
Tel- 011 - 2331475, Fax - 2448624
Mail - chemamadu@yahoo.com

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.